உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 தை 06 திங்கட்கிழமை (20-01-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:55

## இறுதித் தீர்வை நெருங்கும் சமயத்தில்

# புலிகளை படைகளில் சேர்க்கும் திட்டமும் அரசின் பரிசீலனையில்!

## அதற்கும் நம்பியாரின் உதவி நாடப்பட்டது



சத்தீஷ் நம்பியார்

கொழும்பு,ஜனவரி20

தற்போதைய சமாதானப் பேச்சுகளின் பயனாக இறுதித் தீர்வு ஒன்று எட்டப்படும் சமயத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளை அரசுப் படைகளிலும் பொலீஸ் சேவையிலும் இணைத்துக்கொள்வது பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது.

இத்திட்டத்துக்குரிய சாத்தியமான வழிவகைகளை ஆராய்ந்து சிபாரிசு செய்வதற்கும் இந்திய இராணுவ ஜெனரல் சத்தீஷ் நம்பியாரின் உதவியை அரசு ஏற்கனவே நாடி இருந்தது என்று தகவல் வெளியாகி இருக்கிறது.

வடக்கு - கிழக்கில் குறிப்பாக குடாநாட்டில் உள்ள படையினரின் உயர் பாதுகாப்பு வலயங்களை மாற்றி அமைப்பது தொடர்பான திட்டம் ஒன்றை ஓய்வுபெற்ற இந்திய ஜெனரலான சத்தீஷ் நம்பியாரிடம் இலங்கை அரசு கோரியிருப்பது தெரிந்ததே.

உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான சிக்கல் தீவிரமடைவதற்கு முன்னரே இதுதொடர்பாக இலங்கை அரசு, நம்பியாருடன் தொடர்புகொண்டு அவரது உதவியை நாடியது என்றும் -

விடுதலைப் புலிகளை அரசுப் படைகளில் இணைத்துக் கொள்வதற்கு

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் சமாதான வழியின் இலக்கு தனித் தாயகம்தான்!

### டிக்ஸிற் கூறுகிறார்

கொழும்பு,ஜன.20

தங்களின் சொந்த நிலப்பிரதேசத்தை கையகப்படுத்துவதற்கு சமாதான வழிமுறையை புலிகள் நன்கு பயன்படுத்துகின்றனர். அவர்களது மறைமுகமான இலக்கு தனித்தாயகம் தான்.

இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதர் ஜே.என்டிக்ஸிற் மேற்கண்டவாறு எச்சரிக்கை செய்துள்ளார்.

'கல்வ் நியூஸ்' (Gulfnews) செய்தி நிறுவனத்துக்கு அளித்த ஒரு பேட்டியில் டிக்ஸிற் இப்படித் தெரிவித்திருக்கிறார் என்று 'லங்கா அக்கடமிக்' இணையப்பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது.

"யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திரு

(14ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூரில் நடந்த விபத்தில் மீசாலை வாசி உயிரிழப்பு!

யாழ்ப்பாணம்,ஜன.20

நல்லூரில் - சட்டநாதர் சிவன் கோயிலுக்குமுன்பாக - நேற்று முற்பகல் இடம்பெற்ற வீதி விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

மினிபஸ் ஒன்றும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் இந்த விபத்து நேர்ந்தது.

மோட்டார் சைக்கிளில் சென்ற மீசாலை ஐயாகடையடியைச் சேர்ந்த முத்துலிங்கம் தேவபாலன் (வயது44) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளுக்கு குறுக்கே நாய் ஒன்று பாய்ந்ததால் தடுமாறி கட்டுப்பாட்டை இழந்த இவரை வேகமாக வந்த பயணிகள் மினிபஸ் ஒன்று மோதிப் பந்தாடியதாகக் கூறப்படுகிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புக்கு பிரபாகரன் உறுதி அளித்திருக்கிறார்

### வடக்கே சென்று குடியமருமாறு முஸ்லிம்களுக்கு ஹக்கீம் அழைப்பு

கொழும்பு,ஜன.20

முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு உறுதியளித்திருக்கிறார் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் எனவே வடக்கே சென்று உங்கள் சொந்த வீடுகளில் மீண்டும் குடியமருங்கள் என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், இடம்பெயர்ந்த முஸ்லிம்களுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்.

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இப்போது இருக்கின்றார்கள். அவர்கள் நல்லநிலையில் இல்லை. அதனால் பிரபாகரனின் உறுதிமொழியில் நம்பிக்கை வைத்து, இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பவேண்டும் என்றார் ரவூப் ஹக்கீம்.

பிரபாகரனை கடந்த 13.04.2002 இல் முஸ்லிம் காங்கிரஸ் குழு, ஹக்கீம் தலைமையில் வன்னியில் சந்தித்துப் பேசியபோது பிரபாகரன் அளித்த உறுதிமொழி ஒன்று இரு தலைவர்களும் கையொப்பமிட்டு வெளியிட்ட ஆவணத்தில் இடம்பெற்றிருக்கிறது.

"வடக்கு - கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் முக்கிய நடைமுறைப் பிரச்சினைகளுக்கு இச சந்திப்பின்போது தீர்வுகள் காணப்பட்டன.

யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் இருந்து இடம்பெயர்ந்து வாழும் முஸ்லிம் மக்களை மீண்டும் தங்களது சொந்த இடங்களில் குடியமருமாறு சந்திப் பின்போது தலைவர் பிரபாகரன் வேண்டுகோள் விடுத்தார்".

மேற்கண்டவாறு அந்த ஆவணத்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் இந்து மாநாட்டை ஜனாதிபதி ஆரம்பித்து வைப்பார்

### அதற்கு அவர் சம்மதம் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.20

எதிர்வரும் மே மாதம் கொழும்பில் நடைபெறவிருக்கும் சர்வதேச இந்து மாநாட்டின் முதல் நாள் நிகழ்வினைத் தொடக்கிவைக்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சம்மதித்திருக்கிறார்.

மே மாதம் 2 ஆம் திகதிமுதல் 5 ஆம் திகதிவரை - நான்கு நாள்கள் - இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் நேற்று முன்தினம் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசிய சமயம் சர்வதேச இந்து மாநாட்டை ஆரம்பித்து வைக்கவேண்டும் என்று ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டார்.

இந்த அழைப்பு தனக்கு மட்டற்ற மகிழ்ச்சி அளிப்பதாகவும், நிச்சயமாக மாநாட்டினை ஆரம்பிக்க தான் அங்கு வருகை தருவதாகவும் ஜனாதிபதி அமைச்சர் மகேஸ்வரனிடம் தெரிவித்தார்.

(ஐ)

## சு.க.-ஜே.வி.பி. கூட்டணி அமைத்தால் பொ.ஐ.மு. ஏனைய கட்சிகளின் வசம்!

### கட்சி யாப்பை ஆராய்ந்து சட்டத்தரணிகள் தெரிவித்த யோசனை

கொழும்பு,ஜன.20

பொதுக்கூட்டணிக்கான பேச்சுக்களை சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் தொடரவிருக்கின்றன. இப்பேச்சுகளை ஜனாதிபதி சந்திரிக்காவும் ஜே.வி.பி. தலைவர்களும் இன்றும் மீண்டும் நடத்தவிருக்கின்றனர்.

சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் கூட்டணி ஏற்படுமேயானால் பொது ஐக்கிய முன்னணியில் அங்கம்வகிக்கும் ஏனைய கட்சிகளின் நிலைப்பாடு என்ன?

சமசமாஜ, கம்யூனிஸ்ட், தேசவிமுக்தி மக்கள்கட்சி, ஸ்ரீ லங்கா மக்கள் கட்சி என்பன பொது ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளாகும்.

பொது ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சி ஜே.வி.பியுடன் கூட்டணி ஏற்படுத்தினால் மேறகூறிய கட்சிகள் ஒன்றுபட்டு முன்னணியில் இருந்து சு.க.வை வெளியேற்றத் திட்டம் வகுத்திருப்பதாகவும் முன்னணியின் பொதுச் செயலாளர் பதவியைக் கைப்பற்ற விரும்புவதாகவும் அறியப்படுகிறது.

பிரபல ஜனாதிபதி சட்டத்தரணிகள் இருவர் பொ.ஐ.முன்னணியின் யாப்பை ஆராய்ந்து, இது தொடர்பான

(14ஆம் பக்கம் பார்க்க)

### எதிர்க்கட்சிக்குழு நெடுந்தீவு செல்லும்?

கொழும்பு,ஜன.20

இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தர இருக்கும் எதிர்கட்சித் தலைவர்கள் குழுவினர் குடாநாட்டில் சில உயர்பாதுகாப்பு வலயங்களைப் பார்வையிடுவதுடன் தீவுப்பகுதிக்கும் விஜயம் செய்வர் என்று கூறப்படுகிறது. அவர்கள் நெடுந்தீவு செல்லவும் ஏற்பாடாகி உள்ளதாக ஒரு தகவல் தெரியவந்தது.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த

(14ஆம் பக்கம் பார்க்க)

### நுணாவிலில் படைமுகாம்

வவுனியா,ஜன.20

குடாநாட்டில் தென்மராட்சி நுணாவில் பகுதியில் படையினர் பாரிய முகாம் ஒன்றை அமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் - என்று 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது.

நுணாவில் சந்திக்கும் கைதடிப் பாலத்துக்கும் இடைப்பட்ட பகுதியிலேயே இந்தப் பாரிய முகாமை அமைக்கும் பணியில் படையினர்

(14ஆம் பக்கம் பார்க்க)

### தலைநகர் கொழும்பில்

## லண்டன் கலைஞரின் இல்லம் முற்றுகை!



கொழும்பு,ஜன.20

பிரிட்டனின் சர்ச்சைக்குரிய தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் மத்தியூ கெலியின் கொழும்பு இல்லத்தை பொலீஸார் முற்றுகையிட்டு திடீர்த் தேடுதல் நடத்தியிருக்கின்றனர்.

கொழும்பின் புறநகர் பகுதியில் உள்ள இவரது இல்லத்திலிருந்து 54 வீடியோ ஒளி நாடாக்களையும் கணனி ஒன்றையும் பொலீஸார் கைப்பற்றியிருக்கின்றனர்.

சிறுவர்களைப் பாதுகாக்கும் அமைப்பின் தலைமையில் பொலீஸார் இந்தத் தேடுதலை நடத்தினர் என்று அறிவிக்கப்படுகிறது.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான சர்ச்சைகளில் சிக்கியிருப்பவர் மத்தியூ கெலி. இந்த விவகாரம் தொடர்பாக லண்டனில் இவர் மீது விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

பெரும்பாலும் தனது ஓய்வுநாள்களை இலங்கையில் கழித்துவரும் கெலி, கொழும்பில் தனியான இல்லம் ஒன்றில் வசித்துவருகிறார். (ஐ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கலையார்வமும் மகிழ்ச்சியும் யாழ்.மக்களிடம் பிரவகிக்கின்றன

## அடையாறு லக்ஷ்மணன் புளகாங்கிதம்

யாழ்ப்பாணம்,ஜன.20

கலையார்வம் மிகுந்த பெரும் மகிழ்ச்சிக்குரிய சமுதாயமாக யாழ்ப்பாண மக்களைப் பார்க்கிறேன். அனைவருமே இங்கு கலையை ரசிப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

இந்தியாவின் பிரபல பரதக் கலை விற்பன்னர் அடையாறு லக்ஷ்மணன இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற பரதநாட்டிய அரங்கேற்ற விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அடையாறு லக்ஷ்மணன் அங்கு சிறப்புரையாற்றினார்.

யாழ்பல்கலைக்கழக நுண்கலைப் பீட நடனத்துறை தலைவர் கலாநிதி சபா ஜெயராசா தலைமையில் நடைபெற்ற விழாவில் தனது உரையில் அடையாறு கே.லக்ஷ்மனன் மேலும் கூறியதாவது:-

இன்று நடைபெற்ற இக்கலை நிகழ்ச்சியை பரதநாட்டிய அரங்கேற்றம் என்று கூறுவதிலும் பார்க்க தரமான ஒரு நல்ல நாட்டிய நிகழ்ச்சி என்று கூறலாம்.

சங்கீத பாவம்தான் நாட்டிய பாவம். சங்கீதமும் நாட்டியமும் உரிய பாவத்துடன் இணைந்து வழங்கிய செல்வி துஷ்யந்தியின் இந்நாட்டிய நிகழ்வு, என்மனதை உலுக்கிவிட்டது.

சங்கீதம் கற்றால் தாளம், ஞானம தானே வந்துவிடும். அவை இரண்டும கிடைத்து விட்டால் சகல வாத்தியக் கருவிகளையும் இசைக்க முடியும்.

இசை மேதைகளான ராமையா பிள்ளை, தண்டாயுதபாணி பிள்ளை, பத்மா சுப்பிரமணியம் போன்றோர்களினது இசைச் சிறப்புத் தன்மைகளை உள்வாங்கி இந்த நாட்டிய நிகழ்வை துஷ்யந்தி சிறப்பாக செய்துள்ளார்.

நடனம் ஓர் உடற்பயிற்சிக்கலை. பெண்களுக்கு மட்டமல்ல ஆண்களும் பயிலக் கூடியது. எல்லோராலும் பார்த்து பார்த்து ரசிக்கக் கூடிய கலையும் கூட.

கலை பயில்பவர்களுக்கு குரு பக்தி அவசியம். எவரிடம் கலை பயில்கின்றார்களோ, அவர்களை கனம் பண்ணுதல் வேண்டும். சங்கீதம், நடனம், ஓவியம் போன்ற கலைகளை பயிலும் போது இறைவனின் கிருபாகடாட்சம் கிடைக்கிறது. இந்நாட்டிலே இசைக் கலையை உன்னத நிலைக்கு கொண்டு வர சங்கீத, நடன, பாடல் ஆசிரியர்கள் ஒன்றுபட்டு உழைக்கின்றார்கள்.

கலைஞர் ஏரம்பு சுப்பையாபிள்ளை மூலம் நடனப் பயிற்சி பெற்ற பல கலைஞர்கள் இன்று யாழ்ப்பாணத்தில் நடனக் கலையைச் சிறப்பாக வளர்த்து வருகின்றனர் - என்றார். (ஐ-12-152)

# சைவச் சிறுவர் இல்லம் மீண்டும் கைதடியில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.20

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் இடம்பெயர்ந்து ஏழாலையில் இயங்கி வந்த கைதடி சைவச் சிறுவர் இல்லம் நேற்றுமுதல் மீண்டும் தனது சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது.

கைதடியில் இல்லத்தின் ஆரம்ப விழா நேற்றுப் பிற்பகல் 3.30 மணிக்கு சம்பிரதாய முறைப்படி நடைபெற்றது.

இந்து சமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சி.விநாசித்தம்பிப்புலவர் தலைமையில் நடைபெற்ற இந்த ஆரம்ப விழாவில் அகில இலங்கை இந்து சமய அபிவிருத்திச் சபைத் தலைவர் தந்திர தேவா சுவாமிகள், நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரப் பரமாச்சாரியசுவாமிகள் ஆகியோர் ஆசியுரைகளை வழங்கினர்.

யாழ்.பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ், இந்துசமயப் பேரவை செயலாளர் சக்திகிரீவன், யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் மற்றும் அவுடலெட்சுமி பதிப்பக உரிமையாளர் குலபதி ஆறுமுகம் கந்தையா ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்களான திருமதி நாச்சியார் செல்வநாயகம், கலைவாணி இராமநாதன் மற்றும் திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்ல மாணவர்கள் உட்பட நூற்றுக் கணக்கானோர் விழாவில் கலந்து கொண்டனர். (ஐ-5)

சட்டவிரோதமாக தங்கியிருக்கும் இலங்கையருக்கு

# சட்டபூர்வ அனுமதியை வழங்க சிரிய தொழிலமைச்சர் இணக்கம்

சிரியாவில் சட்டவிரோதமாக தங்கி இருக்கும் இலங்கையர்களுக்கு அந்நாட்டில் சட்டபூர்வமாக தங்கியிருப்பதற்கான அனுமதியை வழங்குவதற்கு சிரியா இணக்கம் தெரிவித்திருக்கிறது.

சிரியாவுக்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள தொழில், தொழில் வாய்ப்புக்கள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க, சிரிய தொழில் அமைச்சர் திருமதி அலு ஜாய்கடாருடன் நடத்திய பேச்சுக்களின் பயனாகவே இந்த அனுமதி வழங்கப்படவிருக்கிறது.

தற்பொழுது இரண்டாயிரத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் சிரியாவில் தங்கியிருக்கின்றனர். இவர்களுள் 240 பேர் மட்டுமே சட்டபூர்வமாகத் தங்கி இருக்கவும், தொழில் செய்யவும் அனுமதி பெற்றுள்ளனர். சட்ட விரோதமாக தங்கி இருப்பவர்கள் அனைவரும் மூன்று மாதங்களுக்குள் சிரிய தொழில் அமைச்சில் தம்மை பதிவு செய்துகொள்ள வேண்டும்.

இதேவேளை, அமைச்சர் சமரசிங்க, சிரிய அமைச்சருடன் பேச்சு நடத்திகொண்டிருந்த வேளையில், சட்டவிரோதமாக நுளைய முயன்ற மூன்று இலங்கையர்கள் சிரிய பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர். அமைச்சர் மஹிந்த சமரசிங்கவின் தலையீட்டால் இவர்கள் மூவரும் விடுதலை செய்யப்பட்டனர் என தொழில அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் கூறினார். (ஐ)

# மட்டு.அரசசார்பற்ற நிறுவன இணையத்தின் தீர்மானங்கள்

மட்டக்களப்பு,ஜன.20

மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையக்கூட்டம் நேற்று மட்டக்களப்பு புனர்வாழ்வுக்கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

இணையத்தின் தலைவர் வ.கமலதாஸ் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் 45 அரச சார்பற்ற நிறுவனங்கள் கலந்துகொண்டன.

உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளில் சர்வதேச நிறுவனங்களின் தலையீடுகள் தொடர்பாக புனர்வாழ்வு உபகுழுக் கூட்டத்தில் ஆராயப்பட வேண்டும் எனவும், மட்டக்களப்பிலுள்ள அரசசார்பற்ற நிறுவனங்கள் அனைத்தும் இணையத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் எனவும் கோரும் தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்திலுள்ள 45 நிறுவனங்களின நிர்வாகச் செலவு 30 கோடி ரூபா என்று இணையத்தின் தலைவர் கமலதாஸ் மேலும் தெரிவித்தார். (ஐ)

# செலூலர் தொலைபேசி கட்டணங்கள் அதிகரிக்கும்

கையடக்கத் தொலைபேசிகளுக்கான (செலூலர் தொலைபேசிகள்) கட்டணங்கள் பெப்ரவரி முதலாம் திகதி முதல் ஒரு ரூபாவால் அதிகரிக்கப்படும்.

இக்கட்டண அதிகரிப்புக்கான அனுமதியை தொலைபேசிச் சேவைவர் சீராக்கல் ஆணைக்குழுவிடமிருந்து பெற்றுக் கொண்டிருப்பதாகக் கையடக்கத் தொலைபேசி நிறுவனமொன்றின் பேச்சாளர் தெரிவித்திருக்கின்றார். இக்கட்டணங்கள் அதிகரிப்புக்கான கோரிக்கை சில மாதங்களுக்கு முன்னர் விடுக்கப்பட்டிருந்தது.(ஐ)

## நோயாளிகள் இருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம்,ஜன.20

யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இருவர், நேற்று அங்கு சிகிச்சை பலனளிக்காது உயிரிழந்தனர்.

அளவெட்டியைச் சேர்ந்த என்நடராஜா (வயது 54), மட்டுவிலைச் சேர்ந்த துரைச்சாமி நல்லம்மா (வயது 57) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்கள் ஆவர். (ஐ-9)

## பயிற்சி நெறி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.20

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் முயற்சி திறன் விருத்திமையத் திறப்பு விழாவும் பயிற்சி நெறி ஆரம்பமும் இன்று காலை 10 மணிக்கு சில்லாலையில் உள்ள அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் உப அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-ரி)

## மட்டக்களப்பு விஜயம்

மட்டக்களப்பு,ஜன.20

இன நல்லுறவை மேம்படுத்தும் நோக்குடன் புத்தளம் மாவட்டத்தை சேர்ந்த 75 சிங்கள இளைஞர், யுவதிகள் இன்று மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் செய்யவுள்ளனர். 'எகெட்' நிறுவனத்தின் ஏற்பாட்டில் இவர்கள் மட்டக்களப்பின் பல இடங்களுக்கும் செல்ல இருக்கின்றனர்.

புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் உள்ள ஆயித்தியமலை வியாகுலமாதா ஆலயத்துக்கு நாளை செல்லவுள்ள இவர்கள், அங்குள்ள இளைஞர், யுவதிகளுடன் கருத்துக்களை பரிமாறவுள்ளனர். என தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் அலுவலகர் சிறடேசமூர்த்தி தெரிவித்தார். (ஐ)

## உருத்திரபுரத்தில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

தென்மராட்சி,ஜன.20

கிளிநொச்சி சமுதாய முன்னேற்ற நிலையத்தினர் நடத்திய இலவச தையல் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டு பயிற்சி முடித்து வெளியேறிய மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் உருத்திரபுரம் எட்டாம் வாய்க்கால் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் 'நிக்கொட்' நிறுவனத் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.மகேந்திரன் சமுதாய முன்னேற்ற நிலைய இணைப்பாளர் பூங்குன்றன் ஆகியோர் பயிலுநர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினர். (ஐ-117)

## பயிற்சி நிறைவுநாள் நிகழ்வு

தென்மராட்சி,ஜன.20

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுக் கல்லூரியில் உயர்தரப் பயிற்சிநெறியினை முடித்துக்கொண்டு வெளியேறிய மாணவர்களின் பயிற்சி நிறைவு நாள் நிகழ்வு அண்மையில் கிளிநொச்சியில் இடம்பெற்றது.

முதன்மை விருந்தினராக கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகமும் சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சிவந்தசாமி கிளிநொச்சி கூட்டுறவு சபைத்தலைவர் சு.கேதீஸ்வரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ-117)












கைதடி சைவச் சிறுவர் இல்லத்தின் ஆரம்ப வைபவம் நேற்று நடைபெற்றது. இல்லத்தின் முகப்புத் தோற்றத்தையும், அங்கு இடம்பெற்ற சமய நிகழ்வில் கலந்துகொண்டோரையும் அருட்கவி சி.விநாசித்தம்பி ஆசியுரை வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: வசந்தன்)

# பாகிஸ்தானிய அதிகாரிகளால் இந்தியத் தூதருக்கு தொல்லை!

இந்திய - பாகிஸ்தான் உறவு ஏற்கனவே நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. இந்நிலையில் இந்திய தூதர் சுதீர் வியாசுக்கு பாகிஸ்தான் அரசு அதிக தொந்தரவு கொடுப்பதாக இந்தியா குற்றஞ்சாட்டியுள்ளது.

பாகிஸ்தானில் உள்ள மலேசியத் தூதரகத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்வதற்காகத் தனது காரில் இந்தியக் கொடியை பறக்கவிட்டுக் கொண்டு வியாஸ் சென்று கொண்டிருந்ததாகவும் -

அவரை உடனே பாகிஸ்தான் உளவுப்பிரிவினர் தடுத்து நிறுத்தியதாகவும் -

பின்னர் செல்ல அனுமதித்ததாகவும் -

அவர் செல்லும் வழி நெடுகிலும் பல இடங்களில் இவ்வாறு தொந்தரவு கொடுத்ததாகவும் -

இந்திய அரசு தெரிவித்துள்ளது. 10 நிமிடங்கள் சென்றடையவேண்டிய தூரத்தை இதனால் சுதீர் வியாஸ் அடைய 12 மணிநேரம் ஆனதாக கூறப்பட்டது. பாகிஸ்தானிய வெளியுறவு அமைச்சரிடம் இந்தியா இது குறித்து எழுத்து மூலமான எதிர்ப்பை வழங்கவுள்ளது.

# இனப்பாகுபாட்டை எதிர்த்து அமெ. அதிபர் சார்பில் வழக்கு

வாஷிங்ரன்,ஜன.20

அமெரிக்காவில் மெக்ஸிகன் பல்கலைக்கழகத்தில் மாணவர்களிடையில் கடைப்பிடிக்கப்படும் இனப்பாகுபாட்டு அணுகுமுறையை எதிர்த்து அதிபர் ஜோர்ஜ் புஷ் சார்பில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

நிறவேறுபாட்டின் அடிப்படையில் மாணவர்களைச் சேர்ப்பது, மாணவர்களிடையில் பிளவை ஏற்படுத்தும் செயல்; நியாயமற்றது; அரசியல் சாசனத்துக்கு விரோதமானது என்று அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது

அப்பல்கலைக்கழகத்தில் வெள்ளையர் இனத்தைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. அவர்களுக்குரிய இடங்கள் சற்றுக் குறைந்த மதிப்பெண் பெற்ற கறுப்பின மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

அதை எதிர்த்து மூன்று மாணவர்களும் வழக்குத்தொடுத்தனர்.

இது தொடர்பாக அதிபரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் காண்டலிஸா ரைஸ் வெளியிட்ட அறிக்கையில், மாணவர்களுக்கிடையில் சமச்சீரான எண்ணிக்கை இருக்க வேண்டுமானால், பல்வேறு இன மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்றார்.

(ஓ)

# தயங்காமல் தவறுகளைச் சுட்டிக்காட்டுவோம்: ஜேர்மன் அதிபர் தனது அதிகாரத்தால் எம்மை பணியவைத்துவிட முடியாது!

## 'மெயில் ஒன் சண்டே' பத்திரிகை சவால்

ஜேர்மனிய அதிபர், அதிகாரத்தால் எம்மை பணியவைக்க முடியாது என்று பிரிட்டிஷ் பத்திரிகை சவால் விட்டுள்ளது. அதிபராக இருந்தாலும் தவறுகளை அம்பலப்படுத்த பத்திரிகைகளுக்கு உரிமை உண்டு என்று அப்பத்திரிகை ஆசிரியர் தெரிவித்துள்ளார்.

'மெயில் ஒன் சண்டே' என்ற பிரிட்டிஷ் பத்திரிகை ஜேர்மன் அதிபர் ஜெகார்ட் ஸ்கோறோடரின் அந்தரங்க குறைபாடுகள் குறித்து பல செய்திகளை வெளியிட்டது.

இதனையடுத்து தன்னைப் பற்றிய - தனக்கு அபகீர்த்தியை ஏற்படுத்திய - செய்திகளை மேற்படி பத்திரிகை வெளியிடுவதைத் தடை செய்யும்படி ஜேர்மனிய நீதிமன்றத்தில் அதிபர் ஸ்கொரோடர் மனுத்தாக்கல் செய்தார். நீதிமன்றமும் அவ்வாறே தடை விதித்தது.

ஆனால், இத்தடையை ஏற்க 'மெயில் ஒன் சண்டே' பத்திரிகை ஆசிரியர் மறுத்துவிட்டார். அதிகாரத்தால் எமமை அடிபணிய வைக்க முடியாது என்று அவர் தெரிவித்தார். அத்துடன் தொலைக்காட்சி பெண் அறிவிப்பாளர் ஒருவருடன் ஜேர்மன் அதிபருக்குள்ள சர்ச்சைக்குரிய உறவு பற்றியும் பத்திரிகையில் செய்தி வெளியிட்டுள்ளார்.

'மெயில் ஒன் சண்டே' பத்திரிகை ஆசிரியர் பீற்றர் ஹைட் தெரிவிக்கையில்:-

எமது பத்திரிகை எதனை செய்தியாக வெளியிட வேண்டும், எதனை வெளியிடக் கூடாது என்று கட்டுப்படுத்த ஜேர்மனிய நீதிமன்றத்தை அதிபர் ஸ்கொடரோடர் பயன்படுத்தக்கூடாது. அவர் ஐரோப்பியத் தலைவர்களில் முக்கியமானவர். ஆகவே, அவரது தவறுகளை எமது வாசகர்களுக்குத் தெரிவிக்கவேண்டியது எமது பிரதான கடமையாகும். இதே வேளை, ஜேர்மனிய அதிபரிடமிருந்தோ, ஜேர்மனிய நீதிமன்றத்திடமிருந்தோ பத்திரிகைச் சுதந்திரம் குறித்துபாடம் கற்க வேண்டிய அவசியம் எமக்கில்லை' என்று ஆணித்தரமாகத் தெரிவித்துள்ளார். (ஓ)



மனைவியுடன் ஜேர்மனிய அதிபர்

# மற்றொரு குளோனிங் குழந்தை

டோக்கியோ,ஜன.20

குளோனிங் முறையில் ஜப்பானிய குழந்தை இன்று பிறக்கும் என 'குளோனெய்ட்' என்ற சர்வதேச நிறுவனத்தின் தலைவர் பிரிஜிட் பாய்ஸலர், டோக்கியோ செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்திருக்கிறார்.

கார் விபத்தில் இறந்த இரண்டு வயது ஜப்பானிய சிறுவனின் கலங்களிலிருந்து இந்தக் குழந்தை உருவாக்கப்பட்டிருக்கிறது. குழந்தை யாருடையது? பிறக்கும் குழந்தை எந்த நாட்டில் பிறக்கப்போகிறது என்ற விவரங்களை வழக்கம்போல அவர் தரவில்லை.

ஜப்பானிய குளோனிங்குக்கு அரசு தடை விதித்திருக்கிறது. குளோனிங்கில் ஈடுபடுபவர்களுக்கு 10 ஆண்டு சிறைத்தண்டை, 85 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் அபராதம் விதிக்கப்படும்.

## உலக அரங்கில்

ரேல் என்பவர் தலைமையில் செயற்படும் இயக்கத்தைச் சேர்ந்தவர் பிரிஜிட் பாய்ஸலர். இதுவரை இரண்டு குழந்தைகள் பிறந்துவிட்டதாக அவர் ஏற்கனவே தெரிவித்துள்ளார். ஆனால், அந்த இரு குழந்தைகள் எங்கே இருக்கின்றனர் என்று தெரியவில்லை.

குழந்தைகள் குளோனிங்கில்தான் பிறந்துள்ளனர் என்பதை நிரூபிக்க ஆதாரங்கள் எதனையும் அவர் தரவில்லை.

(ஓ)

# தமிழக கிராமத்தில் நிர்வாண பூஜை; தடுக்க அதிகாரிகள் பிரயத்தனம்

சென்னை,ஜன.20

தமிழகத்தின் ஏற்காடு மலைக் கிராமத்தில் ஆண்டுதோறும் ஜனவரி மாதத்தில் நிர்வாண பூஜை ரகசியமாக நடைபெறுவது வழக்கம். இப்பூசையைத் தடுக்க அதிகாரிகள் பிரயத்தனம் செய்தாலும் இப்பூசை நடத்தப்படுகின்றது.

ஏற்காட்டு வெள்ளைக்கடைக் கிராமத்தில், பொங்கலையொட்டி மழைக்காக இப்பூசையில் பெண்கள் ஈடுபடுவர். இதற்காக கிராமத்தில் உள்ள ஆண்கள் கிராமத்தை விட்டு காலையில் புறப்பட்டு வேட்டைக்குச் செல்வார்கள். கேழ்வரகு றொட்டியை சாப்பிட அவர்கள் எடுத்துச் செல்வார்கள். பின்னர் கிராமத்தில் உள்ள காளியம்மன் கோவில் முன்பாக அக்கிராமப் பெண்கள் அனைவரும் நிர்வாணமாகக் கூடி வழிபாட்டில் ஈடுபடுவார்கள். வெவ்வேறு உணவுப்பண்டங்கள், பழங்கள் போன்றவையே அம்மனுக்குப் படைக்கப்படும்.

இந்த ஆண்டு இந்த நிர்வாணப் பூசையை நடத்த விடுவதில்லை என அரச அதிகாரிகள் தீவிர நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.


(ஓ)


தென்கிழக்கு ஆஸ்திரேலியாவில் பரவும் மிகமோசமான காட்டுத் தீயை கீழுள்ள படங்களில் காணலாம். அரை நூற்றாண்டில் ஆஸ்திரேலியாவில் மூண்ட மிகமோசமான காட்டுத்தீ இதுவென வர்ணிக்கப்படுகிறது.











## ஈராக் மீதான போர் குறித்து

# அமெரிக்காவின் முயற்சிகளை பல நாடுகள் ஆதரிக்கவில்லை

நியூயோர்க்,ஜன.20

ஈராக்மீது போர் தொடுக்க அமெரிக்கா ஜனவரி 27ஆம் திகதியை கெடுவாக விதிப்பதற்கு ஐ.நா. பாதுகாப்புச் சபையின் இதர அங்கத்துவ நாடுகள் ஆதரிக்கவில்லை.

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருக்கின்றனவா என்று சோதனையிடும் ஐ.நா. ஆய்வுக்குழு தனது முதல் பிரதான அறிக்கையை ஜனவரி 27 ஆம் திகதி அளிக்கிறது. அதே நாளில் போர் தொடுக்க அமெரிக்கா திட்டமிட்டு வருகிறது.

இதனிடையே கெடுத் திகதியை மார்ச் 27இற்கு நீடிக்கவேண்டும் என்று ஆயுத சோதனைக் குழுத் தலைவர் ஹன்ஸ் பிலிக்ஸ் கோரியுள்ளார்.

ஆயுத சோதனையில் ஈராக் சரியான ஒத்துழைப்பைத் தரவில்லை என்று ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதர் ஜோன் நெக்ரோபோன்டே கூறினார்.

ஐ.நா. இரகசியக் கூட்டம் கடந்த வியாழனன்று நடைபெற்றது. அதில், இதர உறுப்பு நாடுகள் கெடுவைத் தள்ளிப்போடவேண்டுமென கோரின.

ஆனால், அமெரிக்கா அதை அலட்சியம் செய்துள்ளது.

அமெரிக்க நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் அதிபர் ஜோர்ஜ் புஷ் எதிர்வரும் 28இல் உரையாற்றுகிறார். அதில் அமெரிக்காவின் எண்ணம் வெளிப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பிறகு ஓரிரு தினங்களில் அமெரிக்க இராஜதந்திரிகள் பாதுகாப்பு சபையில் தங்களது நாட்டின் நிலையை விவரிப்பார்கள் எனத் தெரிகிறது.

அதிபர் புஷ்ஷும் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரும் இம்மாதம் 31ஆம் திகதி சந்திக்கவிருக்கின்றனர். அப்போது ஈராக் விவகாரம் குறித்து அவர்கள் விவாதிப்பர் எனத் தெரிகிறது.

ஈராக் மீதான தாக்குதலை ஐ.நா. பாதுகாப்பு மன்றத்தில் அனுமதியைப் பெற்று ஆரம்பிப்பதா அல்லது அனுமதி பெறாமலேயே ஆரம்பிப்பதா என்பதைத்தான் தற்போது தீர்மானிக்க வேண்டியுள்ளது. இதற்கான அவகாசம் எதிர்வரும் 27ஆம் திகதிவரை தான். அதற்குமேல் அமெரிக்கா பொறுக்காது என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொலின் பவல் கூறினார்.

ஈராக் தன்னிடம் இருக்கும் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் குறித்த விவரங்களை அறிவிக்கவேண்டும் என ஐ.நா. தீர்மானம் கூறுகிறது. இதை நடைமுறைப்படுத்துமாறு நிர்ப்பந்திக்கவே அமெரிக்காவும் வேறுசில நாடுகளும் வளைகுடாப் பகுதியில் படைகளை நிறுத்திவைத்துள்ளன.

ஈராக்மீது போர் தொடுப்பது குறித்து அமெரிக்க அதிபர் இதுவரை முடிவு எடுக்கவில்லை. பிரச்சினை அமைதியாக தீர்க்கப்படவேண்டும் என்பதே அவரது விருப்பம். ஈராக்கிடம் இருந்து பேரழிவு ஆயுதங்களை அகற்ற உலக நாடுகளுக்கு கடமை உள்ளது. உலக நாடுகள் இதில் போதிய அக்கறை காட்டாவிட்டால் அமெரிக்காவும் அதன் தோழமை நாடுகளும் சேர்ந்து இந்தக் கடமையை நிறைவேற்றும் என்று கொலின் பவல் கூறினார்.

அமெரிக்கா ஏகாதிபத்திய போக்கில் செயற்படுகிறது அல்லது செயற்பட ஆரம்பிக்கிறது என்ற குற்றச்சாட்டை அவர் மறுத்தார். உலகில் எந்த நாட்டையும் நாங்கள் எங்களது அடிமையாக மாற்றவில்லை என்று அவர் கூறினார்.

ஸ்பெயின் நாட்டிடமிருந்து பிலிப்பைன்ஸ், கியூபா, போர்ட்டோரிகோவை அமெரிக்கா முன்பு கைப்பற்றியதே என்று கேட்டபோது, பிலிப்பைன்ஸும் கியூபாவும் இப்போது சுதந்திரமாக இருக்கின்றன. போர்ட்டோரிக்கோ நிலைமை சற்று வித்தியாசமானது.

ஒருசில நாடுகள் எங்களது கட்டுப்பாட்டில் உள்ளது உண்மைதான். அத்தகைய நாடுகள் எங்களுடன் தற்போதைய உறவை தொடரவுள்ளன என்று கூறியிருந்தார்.

(ஓ)

# புத்தாண்டில் உங்கள் பலன்கள்

## கன்னி

உத்திரம் 2, 3, 4 ஹஸ்தம், சித்திரை 1, 2 பாதங்கள் வரை)

மற்றவர்களின் பாராட்டுதல்களைக் காட்டிலும், பாசத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கும் கன்னிராசி வாசகர்களே!

நீங்கள் புதுமையாகவும், புத்திசாலித்தனமாகவும் பதில்கூறும் ஆற்றல் பெற்றிருப்பீர்கள். உங்களுக்கு ஆத்ம பலத்தைவிட அறிவு பலம் மிகுதியாக இருக்கும். பார்த்த மாத்திரத்தில் உங்களைப் புரிந்து கொள்வதென்பது அரிது. ஏனென்றால் அமைதி உங்கள் முகத்தில் குடிகொண்டிருக்கும். ஆக்ரோஷம் உங்கள் மனதில் இடம் பிடிக்கும். ஒருவரைப் பார்த்தால், பார்த்த உடனேயே, இவர்கள் இப்படித்தான் என்று கணித்து விடுவீர்கள்.

ஆன்மீகத்தில் அதிக நாட்டம் கொண்டிருப்பீர்கள். வாழ்க்கை ரகசியங்களை வெளிக்காட்டிக் கொள்ளமாட்டீர்கள். மற்றவர்களின் ரகசியங்களையும் மனதிலேயே வைத்துக் கொள்வீர்கள்.

உங்கள் புத்திசாலித்தனத்திற்கு வாழ்வில் நடுப்பங்கில் புகழ்கூடும். மதிப்பும், மரியாதையும் உயரும். கன்னியர்களைத் தேர்ந்தெடுத்து மணம் முடிக்கும்போது கவனமாகப் பொருத்தம் பார்த்துச் செய்தால் புகழோடும், பொருளோடும் வாழ இயலும். இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த குணத்தைப்பெற்ற உங்களுக்கு இந்த புத்தாண்டு எந்த அளவுக்கு நன்மை வழங்கப்போகிறது என்பதை நாம் அறிந்து கொள்ள கிரகங்கள் வழிகாட்டுகின்றன.

### சனிப் பெயர்ச்சிக் காலம்

இதுவரை உங்கள் ராசிக்கு 9இல் சஞ்சரித்து வந்த சனிபகவான் 22.5.2003 அன்று 10ஆம் இடம் எனப்படும் தொழில் ஸ்தானத்தில் வலம்வர தொடங்குகிறார். பலவிதங்களிலும் உங்களுக்கு நன்மை கிடைக்கப் போகிறது. பதவியில் மாற்றம் உருவாகும். பாரில் புகழ் கூடும். செயல்களில் ஏற்பட்ட சிரமம் குறையும். உங்கள் சிந்தனைக்கு உலகத்தார் செவிசாய்ப்பர்.

பத்தில் சனி வந்தால் பதவியினில் உயர்வு உண்டு! மெத்தவே சுகம் கிடைக்கும்! மேதினியில் தொழில் வாய்க்குமப்பூ! என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

எனவே மதிப்பும் மரியாதையும் உயரும். கூட்டுத்தொழில் செய்வோர் பங்குதாரர்களை விலக்கி விட்டு தனித்து இயங்க முற்படுவர். சனியின் பார்வை பலத்தால் வாகன யோகம் கிட்டும். வருங்காலத்தில் குடியேறும் விதத்தில் வீடு வாங்குவீர்கள்.

### குரு பெயர்ச்சிக் காலம்

23.7.2003அன்று உங்கள் ராசிக்கு பன்னிரண்டாம் இடத்தில் குரு சஞ்சரிக்க போகிறார். அதன் விளைவாக விரயம்தானே ஏற்படும் என்று நீங்கள் நினைக்க வேண்டாம். குரு இருக்குமிடத்தை விட பார்க்கும் இடங்களே பலன் அதிகம் பெறுகின்றன. எனவே இனி 4, 6, 8 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகிறார்.

பூமி, வீடு சம்பந்தப்பட்ட வகையில் ஏற்பட்ட பிரச்சினை அகலும். எதிரிகள் விலகி ஓடுவர். உத்தியோகத்தில் நல்ல மாறுதல் கிடைக்கும். நீடித்த நோயில் இருந்து நல்ல நிவாரணம் பெறுவீர்கள்.

### ராகு - கேது பெயர்ச்சிக் காலம்

16.8.2003இல் ராகு, கேதுக்களின் பெயர்ச்சியாலும் மாற்றங்களைக் காணப்போகிறீர்கள். 8இல் ராகுவும், 2இல் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். மறைந்த ராகுவால் நிறைந்த தனலாபம் கிட்டும் என்றாலும் உடல் நிலையில் அதிக கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

2ஆம் இடத்து கேது ஆன்மீக நாட்டத்தை அதிகரிக்க வைக்கும். குடும்பத்தில் திடீர், திடீரெனக் குழப்பங்கள் ஏற்பட்டு விலகும்.

### பெண்களுக்கு

இந்த ராசியில் பிறந்த பெண்களுக்கு கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு சிறப்பான வாழ்வு கிட்டும். குடும்பத்தில் சுப காரியங்கள் அதிகம் நடைபெறும். ஆடை, ஆபரண சேர்க்கைகள் அதிகரிக்கும். உடல்நிலையில் இருந்த தொல்லைகள் அகலும்.

பூமியால் ஏற்பட்ட வழக்குகள் அகலும். குருப்பெயர்ச்சிக்கு பிறகு தாய்வழித் தனலாபம் கிட்டும். தம்பதியருக்குள் ஏற்பட்ட பிரச்சினை தீரும் ஆண்டாக மாறலாம்.

### வளம் சேர்க்கும் வக்ர காலம்

இந்த ஆண்டில் சனிவக்ரமும், குருவக்ரமும், செவ்வாய் வக்ரமும் ஏற்படும் காலங்கள் உங்களுக்கு ஓர் அற்புதமான காலமாகும். அக்காலத்தில் எடுத்த செயலில் வெற்றி கிடைக்கும். இல்லத்தில் சுபகாரியம் கைகூடும். பணத்தேவையை பூர்த்தி செய்ய பலரும் முன்வருவர். தொழில் வளம் பெருகும். தூரதேசத்தில் இருந்து அனுகூல செய்தி கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு புதிய பொறுப்புகள் வந்துசேரும்.

### விழிப்புணர்ச்சியுடன் செயற்படவேண்டிய காலங்கள்

புதனின் வக்ரகாலத்தில் எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்வதே நல்லது. தொழிலில் சிக்கல்கள் உருவாகலாம். கொடுக்கல் வாங்கல்களில் பிரச்சினைகள் அதிகரிக்கும். வீண் விரயம் ஏற்படும். இறை வழிபாடே இக்காலத்தில் உங்களுக்கு கை கொடுக்கும்.

**ஜனவரி**

பொருளாதாரத்தை உயர்த்த புது வழிகளில் முயற்சி எடுப்பீர்கள். குடும்பத்தில் தடைப்பட்டு வந்த சுபகாரிய நிகழ்ச்சிகள் தடையின்றி நடைபெறும். மாதத்தின் மையப்பகுதிக்கு பிறகு புதிதாக இடம், பூமி வாங்கும் சிந்தனை மேலோங்கும். வரவும், செலவும் சமமாக இருக்கும். பிள்ளைகளால் வரும் விரயத்தை தவிர்க்க முடியாது.

**பெப்ரவரி**

தொழில் அமோக லாபத்தைப் பெறும் மாதமாக இம்மாதம் விளங்குகிறது. மாதத்தின் முற்பாதியைவிட பிற்பாதியே சிறப்பானதாக அமையும். எடுக்கும் முயற்சியில் எள்ளளவு தடை ஏற்படாது. பொருளாதார நிலை சீராக இருக்கும். சனி வக்ர நிவர்த்தியாவதால் சங்கடங்கள் தீரும். செலவுகள் குறைந்து சேமிப்பு உயரும்.

**மார்ச்**

மாத, முற்பாதியில் 6இல் சூரியன் சஞ்சரிப்பதால் சந்தோஷங்களும், சுகங்களும் கூடும். வெளிவட்டார பழக்க வழக்கத்தால் வெகுமதி கிடைக்கும். தொழில் ரீதியாக எடுக்கும் முயற்சிகள் வெற்றியைத் தரும்.

15ஆந் திகதிக்குப்பிறகு மருத்துவ செலவுகள் அதிகரிக்கும். நூதனப் பொருள்களின் சேர்க்கை உண்டு. உறவினர்களின் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள். சுப காரிய பேச்சு கைகூடும்.

**ஏப்ரல்**

புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். தொழில், உத்யோகத்தில் விரும்பிய இடத்திற்கு மாற்றம் ஏற்படும். வியாபாரத்தில் போட்டிகள் இருந் தாலும் லாபம் வியக்கும் அளவு வந்து சேரும். 10ஆந் திகதிக்கு மேல் குதூகலம் கூடும். எதிர்பாராத தனவரவு கிட்டும்.

**மே**

நவகிரகங்கள் சகாயம் தரும் விதத்தில் சஞ்சரிக்கிறார்கள். எனவே தொழில்கள் தொடங்கும் முயற்சியில் இருந்த இடையூறுகள் அகலும். பிள்ளைகளின் கல்வித் தடை அகலும்.

மாதத்தின் மையப் பகுதியில் மங்கையர் வழியில் ஏற்பட்ட மனக் கலக்கங்கள் தீரும். தந்தை வழியில் அனுகூலம் கிட்டும். பூர்வீக சொத்து பிரச்சினை தீரும். மைத்துனர் வழியிலும் ஆதாயம் கிட்டும். தூர தேசத்தில் இருந்து அனுகூல செய்தி வந்து சேரும்.

**ஜூன்**

சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள். வைராக்யத்தோடு செயல்பட்டு தொழிலில் வளர்ச்சி காண்பீர்கள். ரிஷபத்தில் சுக்ரன் சஞ்சரிப்பதால் இதுவரை சந்தித்து வந்த இடர்பாடுகள் அகலும். இன்பங்கள் வந்துசேரும்.

15ஆந் திகதிக்கு மேல் யோகம் தான் என்றாலும் வீண் விரயங்கள் ஏற்படலாம். தொழிலில் தொல்லை கொடுத்து வந்தவர்கள் எல்லையை விட்டுச் செல்வர்.

**ஜூலை**

உங்களுக்கு உன்னதமாகவே அமைகிறது. உங்கள் ராசிக்கு 11இல் குரு சஞ்சரிப்பதால் எடுக்கும் முயற்சியில் எளிதில் வெற்றி ஏற்படும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். பணம் பல வழிகளிலும் வந்து சேரும். உத்தியோகஸ்தர்கள் விருப்ப ஓய்வு பெற்று புதிய தொழில் தொடங்க வாய்ப்பு உருவாகும்.

17ஆந் திகதி கடகத்தில் சூரியன் சஞ்சரிப்பதால் எண்ணற்ற மாபெரும் மாற்றங்களைக் காண்பீர்கள்.

**ஓகஸ்ட்**

வருமானம் திருப்திகரமாக இருக்கும். எண்ணும் எண்ணங்கள் எளிதில் ஈடேறும். குடும்பத்தில் இடையிடையே சண்டை சச்சரவு ஏற்பட்டு விலகும். தொழில் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்கள் விலகிச் செல்வர்.

மாதத்தின் பிற்பாதியில் ஏற்படும் ராகு கேது பெயர்ச்சியால் வீண் விரயங்கள் அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் குறையும். உடல்நல பாதிப்புகள் உருவாகும். எனவே இந்த காலத்தில் இறை வழிபாடே உங்களுக்கு கை கொடுக்கும்.

**செப்ரெம்பர்**

உங்கள் ராசிக்கு 2இல் கேது சஞ்சரிப்பதால் எதையும் நிதானத்துடன் செய்வது நல்லது. தொழில் ரீதியாக எடுத்த முயற்சியில் தடைகள் உருவாகும். வாகனப் பழுதுகள் அதிகரிக்கும். குடும்பச் சுமை கூடும். எடுத்த காரியத்தை எளிதில் செய்ய இயலாது. விரயஸ்தானத்தில் 17 ஆந் திகதி சூரியன் சஞ்சரிக்கப் போவதால் மாதத்தின் பிற்பாதியில் வரவைவிட செலவு இரு மடங்காகும். நரம்பு, எலும்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகளால் நலக்கேடு உருவாகும். வெளிவட்டார பழக்க வழக்கத்தில் மனக்கசப்பு அதிகரிக்கும்.

**ஒக்ரோபர்**

எதையும் திட்டமிட்டு செய்ய இயலாது. நண்பர்கள், விரோதிகள் ஆவார்கள். நீங்கள் எடுக்கும் முயற்சிகளில் இடையூறுகள் அதிகரிக்கும். ஆரோக்ய பாதிப்பால் அலுவலக பணிகளை குறிப்பிட்ட நேரத்தில் செய்ய இயலாது. 18ஆந் திகதி சூரியப் பெயர்ச்சிக்கு பிறகு செலவுக்கேற்ற வரவு வந்து சேரும். மாதக் கடைசியில் சனி வக்ரமடைவதால் திடீர் இடமாற்றங்கள் மற்றும் பயணங்கள் உருவாகலாம்.

**நவம்பர்**

தனவரவு கூடும் என்றாலும் குருவும், ராகுவும் உங்களுக்கு சாதகமற்ற நிலையில் சஞ்சரிப்பதால் நீங்கள் எதையும் எதிர் நீச்சல் போட்டே சமாளிக்க இயலும். உங்கள் முயற்சியில் வெற்றி கிடைக்க உறுதுணை புரிவதாகச் சொன்ன நண்பர்கள் கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம்.

17ஆந் திகதி விருட்சிகத்தில் சூரியன் சஞ்சரித்த பிறகு சகோதர வழியில் இருந்த சச்சரவுகள் அகலும். பூமிப் பிரச்சினை அகலும்.

**டிசெம்பர்**

புதன் வக்ரம் பெறுவதால் எதிலும் கவனமுடன் இருப்பதே நல்லது. ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்தும் சூழ்நிலை உருவாகும். மனநிம்மதி குறையும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். பணவரவு திருப்தியளிக்கும் என்றாலும் வரும் முன்னே செலவு காத்திருக்கும். இக்காலத்தில் சர்ப்ப சாந்திகள் செய்வதன் மூலம் சந்தோஷத்தை நீங்கள் காணமுடியும்.

தனுசில் சூரியன் சஞ்சரிக்க போவதால் தாயின் உடல் நலத்தில் அதிககவனம் செலுத்துங்கள்.

(மிகுதி நாளை)

# பொறிவெடியில் சிக்கி இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம்,ஜன.20

பன்றிக்குவைத்த பொறிவெடிகளில் சிக்கிய இருவர் இருவேறு சம்பவங்களில் காலில் படுகாயமடைந்தனர்.

முள்ளியவளைப் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற ஒரு சம்பவத்தில் பாலசுப்பிரமணியம் சுபாஜினி(வயது-29) என்பவர் இடது கால் முழங்காலுக்கு கீழ் படுகாயமடைந்தார்.

இவர் பற்றை நிறைந்த பகுதிக்குள் சென்ற சமயம் பொறிவெடியில் சிக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த இரு நாள்களுக்கு முன் இடம்பெற்ற மற்றைய சம்பவத்தில் தனது கச்சான் வயலுக்குக் காவலுக்குச் சென்ற செல்வநாயகம் தியாகலிங்கம் (வயது-47) என்பவர், மற்றைய கச்சான் வயலுக்குக் காவலாக வைக்கப்பட்ட பொறிவெடியில் சிக்கி வலது கால் முழங்காலுக்குக் கீழ் படுகாயமடைந்தார்.

முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த இவர்கள் இருவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ம-15)

# பூநகரி பிரதேச செயலகம் புதிய கட்டடத்தில் இயங்குகிறது

யாழ்ப்பாணம்,ஜன.20

பூநகரி பிரதேச செயலகம் நேற்று முன்தினம் முதல் புதிய கட்டடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது.

இதனை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரி.இராசநாயகம் திறந்துவைத்தார்.

பலவருடங்களுக்குப் பின்னர் மேற்படி பிரதேச செயலகம் திறந்து வைக்கப்பட்டமை, மீள்குடியமர்வு மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு மக்களுக்குப் பெரிதும் உறுதுணையாக இருக்கும் என அங்கு உரையாற்றிய அரச அதிபர் இராசநாயகம் தெரிவித்தார்.

அன்றைய தினம் அப்பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வழங்கவென கிளிநொச்சி மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் சு. தனிநாயகம் ஆயிரம் தென்னங்கன்றுகளை பூநகரிப் பிரதேச செயலரிடம் கையளித்தார்.

இதேபோன்று ஆயிரம் தென்னங்கன்றுகள் கடந்தவாரமும் கரச்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. (எ-12)

# வலி.தெற்கு பிரதேசத்தில் இம்முறை 10,612 மாணவர் சீருடை பெறுவர்

வலி.தெற்கு,ஜன.20

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் இவ்வருடம் 10 ஆயிரத்து 612 பாடசாலை மாணவர்களுக்கு இலவசச் சீருடைகள் வழங்கப்படவுள்ளன.

சீருடை பெறுவதற்கான கூப்பன்கள் மாணவர்களுக்கு விநியோகிக்கப்படுவதற்காக சம்பந்தப்பட்ட கிராம அலுவலர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்றும் -

மாணவர்கள் தத்தமது பகுதி பல நோ.கூ.சங்கங்களில் கூப்பன்களைச் சமர்ப்பித்து சீருடைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் -

உதவிப் பிரதேச செயலர் ஆர். ஜெயப்பிரகாசம் அறிவித்துள்ளார். (எ-152)



இணுவில் கந்தசுவாமி ஆலய இளந்தொண்டர் சபையினர் நடத்திய சமய அறிவுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்கள் சபை உறுப்பினர்களுடன் இணைந்து எடுத்துக்கொண்ட படம் இது. (எ)

உதயன்

# ஆயுதக் களைவுக்குப் பதில் ஆயுதக் குறைப்பா?

சமாதானப் பேச்சுக்கள் குறித்து வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவிலும் கொழும்பிலும் விளக்கமளிக்கப்பட்டு வருகிறது.

சமாதானப் பேச்சுக்களுக்கு அனுசரணை வழங்கி வரும் நோர்வே குழுவினரில் ஒருவரும் விசேட தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம் ஒஸ்லோவில் அமெரிக்கா, இந்தியா உட்பட முப்பது நாடுகளின் இராஜதந்திரிகளுக்கு கடந்தவாரம் சமாதானப் பேச்சுக்கள் பற்றி விளக்கமளித்தார். கொழும்பில் அந்தப் பணியை சமாதானப் பேச்சுக்களில் அரச தரப்புக் குழுத் தலைவரும் அரசுப் பேச்சாளரும் அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் செய்தார்.

இராணுவத்தினரையும் உறுப்பினர்களாகக் கொண்ட பதற்றம் தணிப்பு மற்றும் இயல்பு நிலையை ஏற்படுத்துவது தொடர்பான உப குழுவில் புலிகள் நம்பிக்கையிழந்து, அந்தக் குழுவில் இருந்து விலகிக்கொண்டார்கள். இது துரதிர்ஷ்டவசமானது என்று எரிக் சொல்ஹெய்ம் இராஜதந்திரிகளுக்குத் தெரிவித்தார்.

இந்த உப குழுவின் கடமைகளை இராணுவத்தினர் அங்கம் வகிக்காத உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வு தேவைகளுக்கான உப குழு பொறுப்பேற்றுள்ளது.

என்றாலும், இராணுவத்தினரும் புலிகளும் நீண்ட காலம் சந்தித்துப் பேசாமல் இருப்பது துரதிர்ஷ்டம் தான் என்றார்.

நிஜத்தைப் புரிந்துகொண்டவர் எரிக் சொல்ஹெய்ம். என்றாலும், அனுசரணையாளர்களில் ஒருவர் என்ற காரணத்தால் அவரால் விடயத்தைப் பொதுப்படையாகவும் பூடகமாகவும்தான் சொல்லமுடியும். அதற்கு மேலே சொல்லமுடியாது.

பேராசிரியர் பீரிஸின் நிலை வேறு. உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களின் குடியிருப்புகளிலும் சில பொதுக் கட்டடங்களிலும் இராணுவம் முகாம்களை அமைத்திருக்கிறது. அந்த முகாம்களை அகற்றினால்தான் மக்களை அங்கே மீள்குடியமர்த்தமுடியும்.

இது தொடர்பாக பிரிட்டனிடமும் இந்தியாவிடமும் ஆலோசனை கேட்டுள்ளோம் என்றார் பேராசிரியர் பீரிஸ்.

மற்றொரு முக்கியமான, அதேவேளை, சர்ச்சைக்குரிய கருத்தையும் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்தார்.

புலிகளிடம் நீண்டதூர வீச்சுத்திறனுடைய கனரக ஆயுதங்கள் உள்ளன. இராணுவத்திடமும் கனரக ஆயுதங்கள் உள்ளன. என்றாலும், இராணுவ முகாம்களை அகற்றுமாறு புலிகள் கோரவில்லை. ஆயுதங்களை கையளிக்குமாறு அரசும் புலிகளைக் கேட்கவில்லை.

எவ்வாறாயினும், இருதரப்பும் இராணுவச் சமநிலையில் குறைப்புச் செய்யவேண்டிய தேவை உள்ளது. எத்தகைய அடிப்படையில் குறைப்புக்களை மேற்கொள்ளலாம் என்பது பற்றி அடுத்தடுத்த சுற்றுப்பேச்சுக்களில் ஆராயவேண்டியது அவசியமாகிறது என்றார் பேராசிரியர் பீரிஸ்.

அதாவது, புலிகள் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டும் என்று சொல்லாமல் ஆயுதங்களைக் குறைக்க வேண்டும் என்கிறார் அமைச்சர்.

உயர் பாதுகாப்பு வலயத்தில் யாழ். மக்களை அவர்களின் சொந்த வீடுகளில் மீளக்குடியமர்த்துவதற்கும் புலிகள் ஆயுதங்களைக் கையளிக்கவேண்டும், கனகர ஆயுதங்களை செயலிழக்கச் செய்யவேண்டும் என்று யாழ்.கட்டளைத்தளபதி சரத் பொன்சேகா நிபந்தனை விதித்தார். அதையடுத்தே இராணுவத்தினரின் உள்நோக்கத்தைப் புரிந்துகொண்டு, அவர்களோடு இனிப் பேசிப் பயனில்லை என்று அவர்கள் அங்கம் வகிக்கும் பதற்றம் தணிப்பு மற்றும் இயல்பு நிலையை ஏற்படுத்துதல் தொடர்பான உப குழுவில் இருந்து புலிகள் விலகினார்கள்.

இப்போது ஆயுத பலத்தைப் குறைப்பது பற்றி அடுத்தடுத்த பேச்சுக்களில் ஆராயவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது என்று பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூறுகிறார்.

பதற்றத்தைத் தணித்து, இயல்பு நிலையை ஏற்படுத்தி மக்களை அவர்களுடைய சொந்த வீடுகளில் மீளக்குடியமர்த்துவதற்கு ஆயுதக் குறைப்பு நிபந்தனை ஓர் ஆலோசனையாகத்தானும் பேச்சுக்களில் முன்வைக்கப்படுமானால் உப குழுவில் இருந்து விலகியது போல பேச்சுக்களில் இருந்தும் வெளியேற புலிகள் நினைக்கமாட்டார்களா என்ன?

எங்கேயும் உயர் பாதுகாப்பு வலயமோ இராணுவப் பிரசன்னமோ இருக்கக்கூடாது என்று புலிகள் கூறவில்லை. மக்களைக் கஷ்டப்படுத்தும் கெடுபிடியைத் தான் எதிர்க்கிறார்கள்.

போர் நிறுத்தப்பட்டு ஒருவருடமாகியும் மக்களின் அவலம் தீரவில்லை. இயல்பு நிலை திரும்பவில்லை. மக்களை அவர்களின் சொந்த வீடுகளில் மீள்குடியமர்ந்து அவலமின்றி வாழவிடுங்கள் என்றுதான் புலிகள் கேட்கிறார்கள்.

அதற்குப்போய் சமபலம், அரைப்பலம், கால் பலம் என்று கணக்குப் பார்த்துக்கொண்டு இருந்தால் கஷ்டப்படும் மக்களுக்கு விமோசனம் கிடைக்குமா? புலிகள் மேலும் பொறுமை காப்பார்கள் என்று எதிர்பார்க்கமுடியுமா?

## கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில்

# போதிய தாதியர்கள் இல்லை; வைத்தியசேவை நெருக்கடிக்குள்!

## எச்சரிக்கின்றார் சுகாதாரப் பணிப்பாளர்

கிளிநொச்சி,ஜன.20

கிளிநொச்சி, முல்லைத்தீவு சுகாதாரத் திணைக்கள நிர்வாகத்தின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளில் சிறந்த முறையில் வைத்திய சேவையை வழங்க முடியாமைக்கு தாதியர் பற்றாக்குறையும் ஒரு முக்கிய காரணமாகும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி.

இது தொடர்பாக அவர் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைப் பொறுத்தவரை தற்போது 90 தாதியருக்கு வெற்றிடம் உள்ளது. ஆனால், 26 தாதியர்கள் மட்டுமே மிகுந்த சிரமத்தின் மத்தியில் தியாக சிந்தையுடனும் அர்ப்பணிப்புடனும் சேவையாற்றி வருகின்றனர்.

இந்நிலையில் நாடளாவிய ரீதியில் 930 தாதியர்களுக்கு புதிய நியமனங்கள் வழங்கப்பட்டபோதிலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இரு மாவட்டங்களுக்கும் இருவர் மட்டுமே நியமனம் செய்யப்பட்டுள்ளமையானது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.


சாதகமான ஒரு சமாதான சூழல் ஏற்பட்டிருக்கும் இக்காலப் பகுதியில், தாதியர்கள் பற்றாக்குறையால் வைத்திய சேவையை வழங்குவதில் ஏற்படும் பின்னடைவுகளால் மக்கள் பல இன்னல்களையும் இறப்புக்களையும் சந்திக்கும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

வருடாவருடம் மேற்படி இரு மாவட்டங்களுக்கும் எம்மால் சராசரியாக 10 பேர் வீதம் தெரிவுசெய்யப்பட்டு தாதியர் பயிற்சிக்கு அனுப்பப்பட்டாலும் அவர்கள் பயிற்சி முடிவடைந்ததும் எமது பகுதிக்கு சேவையாற்ற முன்வராது பிற மாவட்டங்களிற்கு விரும்பி நியமனம் பெற்றுச் செல்வது மிகவும் கவலைக்குரியது.

இந்நிலை தொடருமெனில் தாதியர் பயிற்சிக்கு தாதியர் மாணவர்களை தெரிவுசெய்து அனுப்புவதை நிறுத்தும் சூழ்நிலை ஏற்படலாம். எமது ஆளணிப் பற்றாக்குறையும் தேவைகளையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தியுள்ளேன்.

- என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(எ)





வடபிரதேச இந்துப் பேரவையின் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று யாழ்.வீதியில் (ஸ்ரீதர் தியேட்டர் அருகில்) இடம்பெற்றபோது சுவாமி தந்திரதேவா, இந்துப் பேரவையின் தலைவர் சு.நித்தியானந்தன் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதைப் படங்களில் காணலாம். நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளும் படத்தில் காணப்படுகின்றார். *(படங்கள் : வசந்தன்)*

## அனைத்துப் பாடசாலைகளிலும்

# 'வழிகாட்டல் ஆலோசனை' திட்டம் முழு அளவில் நடைமுறையாகும்

அர்சுவேலி,ஜன.20

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் இந்த வருடத்தில் இருந்து 'வழிகாட்டலும் ஆலோசனையும்' வேலைத்திட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

புதிய கல்விச் சீர்திருத்தத்தில் வலியுறுத்தப்பட்ட 'வழிகாட்டலும் ஆலோசனையும்' செயற்பாடுகள் கடந்த காலத்தில் பரீட்சார்த்தமாக தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்டுவந்தன.

இந்த வருடம் அனைத்துப் பாடசாலைகளிலும் இது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. 'வழிகாட்டலும் ஆலோசனையும்' செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு வசதியாக பொறுப்பாசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

300 மாணவர்களுக்கு மேல் கல்வி கற்கும் பாடசாலைகளில் ஒரு ஆசிரியர் வகுப்பறைக் கற்பித்தல் கடமையில் இருந்து இதற்காக முற்றாக விடுவிக்கப்பட்டுள்ளார்.

300 மாணவர்களுக்குப் குறைவாக உள்ள பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைக்கு நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வாரத்தில் 15 மணித்தியாலங்களுக்கு குறையாத நேரத்தை வழிகாட்டல் ஆலோசனைச் சேவைக்கும் 12மணித்தியாலங்கள் வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாட்டிற்கும் பயன்படுத்த வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வழிகாட்டல் ஆலோசனைச் சேவைக்கு பொருத்தமான முறையில் நேரசூசிகை தயாரிக்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு சுற்றறிக்கைகள் மூலம் மாகாணக் கல்வி அமைச்சும் வலயக் கல்விப் பணிப்பாளர்களும் அறிவுறுத்தியுள்ளனர்.

(ஒ-11)

### நாளை

தை 17
செவ்வாய்க்கிழமை
(21.01.2003)
திதி : திருதியை
பிற்பகல் 1.36 வரை.
நட்சத்திரம் : மகம்
பிற்பகல் 2.21 வரை.
சதுர்த்தி விரதம்
சுபநேரம் : 11.05 - 12.35
ராகுகாலம் : 3.35 - 5.05
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

'உரிமைகளுக் காகப் போராடும் இனத்தின் போராட்டத்தை கவசமாகப் பயன்படுத்தி தவறிழைப்பவர்களே அதிக ஆபத்தானவர்கள்.

## பாடசாலை மாணவர்களுக்கு

# தமிழீழ வரலாற்றுக் கண்காட்சி தொடர்பான எழுத்துப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜன.20

யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் தமிழீழ வரலாற்றுக் கண்காட்சியில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களுக்கான எழுத்துப் பரீட்சைப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

'பொங்குதமிழ்' நிகழ்வின் 2ஆவது ஆண்டு நிறைவையொட்டி கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான மேற்படி கண்காட்சி எதிர்வரும் 23ஆம் திகதிவரை நடைபெறும். தினமும் காலை 9மணிமுதல் இரவு 9மணிவரை பொதுமக்கள் கண்காட்சியைப் பார்வையிடலாம். யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையுடன் இணைந்து இக்கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது.

இதில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தரம் 9முதல் ஜி.க.த.(உயர்தரம்) வரையிலான மாணவர்களுக்கு எழுத்துப் பரீட்சை நடத்தப்பட உள்ளது. இந்தப் பரீட்சை எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறுமெனவும் இதில் வெற்றி பெறுபவர்களுக்கு சர்வதேச தமிழீழ மாணவர் அமைப்பினால் பரிசில்களும்சான்றிதழ்களும் வழங்கப்படுமெனவும் -

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

(ஒ)

## கிளிநொச்சி மாவட்டத்தில்

# உதவி அரச அதிபர்களாக நிர்வாக சேவை அதிகாரிகள்

தென்மராட்சி,ஜன.20

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பளை, கரைச்சி, கண்டாவளை ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கு இலங்கை நிர்வாகசேவை அதிகாரிகள் உதவி அரச அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாண உதவி அரச அதிபர் பிரிவுகளில் கடமையாற்றியோரே இப்பதவிகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் கரைச்சி, கண்டாவளை ஆகிய பிரிவுகளுக்கான புதிய உதவி அரச அதிபர்கள் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. பளை உதவி அரச அதிபராக மண்முனைப்பற்று உதவி அரச அதிபராகக் கடமையாற்றிய திருமதி கலைவாணி பத்மராஜ் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதுவரை இலங்கை எழுதுநர் சேவை அதிசிறப்புத்தரத்தை சேர்ந்தவர்கள் பளை, கண்டாவளை பிரிவிலும், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் கரைச்சிப் பிரிவிலும் உதவி அரச அதிபர்களாகக் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

# மண் அணைகள் அகற்றப்படுகின்றன

தென்மராட்சி,ஜன.20

பளைப்பிரதேசத்தில் விமானக் குண்டு வீச்சினால் ஏற்பட்ட பாரிய குழிகளை மூடுவது மற்றும் படையினரால் அமைக்கப்பட்ட பாதுகாப்பு மண் அரண்களை அப்புறப்படுத்துவது போன்ற பணிகளை கிளிநொச்சி மாவட்ட செயலக புனர்வாழ்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

முதல் கட்டமாக பளை நகரப் பகுதி, ஆஸ்பத்திரி ஆகியவற்றில் உள்ள பாரிய குழிகள் புல்டோசர் மூலம் நிரப்பப்பட்டு வருகின்றன. தம்பகாமத்திலிருந்து அரசர்கேணி வரையில் அமைக்கப்பட்டிருந்த மண் அணைகளும் அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன. (ம-117)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 07 - 12 - 1939

மறைவு 20 - 01 - 2001

### செல்வி பரமேஸ்வரி இராமலிங்கம்

திதி.16-01-2003

அன்புக்கு இலக்கணமாய் வாழ்ந்து விட்டு-இன்று எம்மை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டீரே!-நீர் மறைந்தாலும் நினைவுகள் மறையவே மறையாது!

அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

*கல்வயல்,*
*சாவகச்சேரி.* (12449) குடும்பத்தினர்.

## 31 ஆவது நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



தோற்றம் 21 - 08 - 1921

மறைவு 21 - 12 - 2002

### திருமதி செல்வரெத்தினம் செல்வரெட்ணம்

*அன்போடும் பண்போடும் வாழ்ந்த உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

காலஞ்சென்ற முன்னாள் உரிமையாளர், யாழ்ப்பாணம் பெஷன் ஹவுஸ் செல்வரெட்னம் அவர்களின் அருமை மனைவி திருமதி செல்வரெத்தினம் செல்வரெட்னம் அவர்களின் வீட்டுக்கிருத்தியம் அன்னாரின் இல்லத்தில் இன்று (20.01.2003) திங்கட்கிழமை நடைபெறுகின்றது. அத்துடன் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*9, சேர் பொன்.இராமநாதன் வீதி,*
*கலட்டி, யாழ்ப்பாணம்.* (13409) குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1930 - 10 - 28

மறைவு 2002 - 01 - 30

### அமரர் செல்லப்பா அருளானந்தம்

திதி: 2003-01-20

எங்கள் குடும்ப ஒளி மறைந்து
ஆண்டு ஒன்று ஓடி முடிந்தது
ஆனாலும் எம்சோகம் ஓயவில்லையே!
*ஆத்மா சாந்தி அடைவதாக!*

*இணுவில் மேற்கு,*
*இணுவில்.* (13207) மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# இடம், தகுதி, சூழலின்தன்மை அறிந்து செய்யப்படுவதே உண்மை உதவி

## லயன்ஸ் பிரிவுத் தலைவர் சற்குணராசா தெரிவிப்பு

அச்சுவேலி,ஜன.20

இடம், தகுதி, சூழல் அறிந்து ஏற்புடைய விதத்தில் செய்யப்படும் உதவியே உண்மையான சேவையாகும்.

இதனை மனதில் கொண்டு யுத்த அனர்த்தங்களால் இன்னல்பட்டிருக்கும மக்களின் துன்பங்களைப் போக்கும் பணியில் அர்ப்பணிப்பு சிறப்புடன லயன்ஸ் கழகங்கள் செயற்படவேண்டும்

-இவ்வாறு கூறினார் யாழ்.மாவட்ட லயன்ஸ் பிரிவு 9 இன் தலைவர் லயன் ரீ.சற்குணராசா.

அச்சுவேலி வட்ட லயன்ஸ் கழகத்தின் ஆரம்பவிழா ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்தில் அண்மையில உரும்பிராய் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் ஏ.ஏகாம்பரநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

லயன்ஸ் கழக உறுப்பினர்கள் கழகத்தின் கோட்பாட்டினை ஏற்று கழகத்தின் பெருமையை உறுதி செய்வதோடு மக்களுக்கு சேவையாற்ற முன்வரவேண்டும்.

சேவையால் உயர்ந்தது லயன்ஸ கழகம். சேவை என்பது உயர் கௌரவத்தையும், அந்தஸ்தையும் பேணுவதாகக் கருதிக்கொள்ளக்கூடாது.

மக்களுக்கு சேவையாற்ற வேணடிய லயன்ஸ் கழகம், தேவையானவர்களை இனங்கண்டு தேவையான சூழலில் தகுதியானவர்களுக்கு சேவையாற்ற வேண்டும். பசியோடு இருப்பவர்களுக்கு உணவு வழங்காமல் உணவு உண்டு புளிப்பேறியவர்களுக்கு உணவு வழங்கக் கூடாது.

சமூகத்தில் நலிவடைந்தவர்களின் தேவைகளை அறிந்து ஏற்புடைய உதவியை வழங்கவேண்டும். சமகாலச் சூழலில் எமது மக்கள் யுத்தத்தின் வடுக்கள் நிறைந்து காணப்படுகின்றனர். அவர்களுக்கு ஏற்புடைய உதவிகளை வழங்கவேண்டும்.

சேவையால் - உயர்ந்தவர்கள் சமூகத்தில் உயர்ந்து இருப்பார்கள். அச்சுவேலி வட்ட மக்களின் தேவைகளை அறிந்து தெளிவான திட்டங்கள், தீர்மானங்களுடன் சிறப்பான சேவையாற்ற முன்வரும் அச்சுவேலி வட்ட லயன்ஸ் கழகத்தின் பணிகள் சிறப்படைய பிராந்திய ரீதியில் உதவுவோம் - என்றார்.

விழாவில் பிரதம விருந்தினராகக கலந்துகொண்ட மாவட்ட இணைப்பாளர் லயன்ஸ் டாக்டர் எஸ். குலேந்திரன் உரையாற்றும்போது:-

சேவையால் உயர்ந்த வரலாற்றினைக் கொண்ட லயன்ஸ் கழகத்தில பணிகள் மேலும் விரிவடைந்து செல்கின்றன. லயன்ஸ் கழகத்தின் பணிகள மக்களுக்கு உதவுவதாக அமைய வேண்டும். மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்படும் சேவைகள் தெரிவு செய்யப்பட்ட பிரதேசத்தில் வாழும் மக்களின் மேம்பாட்டை மையமாகக் கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது. இதனையே தலைமைப்பீடமும் வலியுறுத்தி நிற்கின்றது - என்றார்.

அச்சுவேலி வட்ட லயன்ஸ் கழக உறுப்பினர்கள் 27 பேருக்கு டாக்டர் லயன் குலேந்திரன் பதவிப் பிரமாணம் செய்து வைத்ததுடன் கழக உறுப்பினர்களை அறிமுகம் செய்து வைத்தார். (எ-11)

### பாராட்டு விழா

ஆளுநர் விருது பெற்ற ஜி.ஜி. தேவதாசனைப் பாராட்டும் நிகழ்வும், கலை நிகழ்ச்சிகளும் இன்று திங்கட கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு புனித அந்தோனியார் விளையாட்டரங்கில நடைபெறவுள்ளன.

புனித செபஸ்தியார் திருநாளை முன்னிட்டு பாஷையூர் புனித அந்தோனியார் மக்கள் முன்னேற்ற சன சமூக நிலையத்தினர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். (ம-ரி)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 24 - 02 - 1926

மறைவு 21 - 12 - 2002

### திருமதி சரஸ்வதி கதிரவேலு

அவர்கள் சிவபதமடைந்த 31ஆம் நாள் நினைவுகூரல். அந்தியேட்டி. ஆத்மசாந்திப் பிரார்த்தனை என்பன எமது இல்லத்தில் இன்று (2003-01-20) திங்கட்கிழமை நடைபெறும். அந்நிகழ்வில் பங்குபற்றி அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார். உறவினர். நண்பர்கள். அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

க.கனகசபாபதி
(களஞ்சியப்பொறுப்பாளர், இலங்கை மின்சாரசபை),
க.குகதாசன்
(பிரதேச செயலகம், நல்லூர்).

*7, திருமகள் வீதி,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.* (13401)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 16 - 03 - 1924

மறைவு 21 - 12 - 2002

### அமரர் சா.வைரமுத்து

ஆதரிக்க ஆயிரம் உறவுண்டு
அப்பா என அழைக்க நீங்கள்
இல்லையே! அப்பா உங்கள்
உடல் எம்மை விட்டுச் சென்றாலும்
உயிர் எங்களை விட்டு அகலாது!

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (20.01.2003) திங்கட்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கலாசாலை வீதி,* அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
*திருநெல்வேலி.* (13428) பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம
ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் துணை

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் தைத்திங்கள் 8ஆம் நாள் (22-01-2003) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிமுதல் 11.24 மணிவரை வரும் மீனலக்கின சுபமுகூர்த்த நல்வேளையில்

அமரர் இராசதுரை தம்பதிகளின் புத்திரன்
திருவளர் செல்வன்
**பகவான்தாஸ்** (பகவான்)
அவர்களுக்கும்

திருவாளர் பாலகிருஷ்ணன் அவர்களின்
செல்வப் புதல்வி திருவளர் செல்வி
**லசிந்தா** (லசி)
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து இடம்பெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

☛ திருமண வரவேற்பு மணமகள் இல்லத்தில் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும். எனவே இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*தங்கள் நல்வரவை நாடும்:*

திருமதி இரத்தினபூபதி இராசதுரை
680/2, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

கா.பொ.பாலகிருஷ்ணன்,
பா.ஜனந்தன், பா.சசிந்தன்
692, கே.கே.எஸ். வீதி,
பூநாறி மரத்தடி, யாழ்ப்பாணம்.

(13184)

# மக்களுக்கு சேவையாற்றுவதற்காக வர்த்தகத்தில் ஈடுபட்ட இளைஞன்

## செவிப்புலன் கருவி, மூக்குக் கண்ணாடி உற்பத்தியில் மிகிர பெற்ற அனுபவம்




ரி.என்.எல். தொலைக்காட்சி 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் "விக்கிரம ஆராச்சி ஒப்டீஸியன்" உரிமையாளர் மிகிர விக்கிரம ஆராச்சியை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்கிரமவும் 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி காண்கிறார்கள்.

*ரி.என்.எல். தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் - நேருக்கு நேர் நிகழ்ச்சியில் கடந்த 14ஆம் திகதி தோன்றி, தனது தொழில் முன்னேற்றம் பற்றி விளக்கினார் "விக்கிரம ஆராச்சி ஒப்டீஸியன்ஸ்" உரிமையாளர் மிகிர விக்கிரம ஆராச்சி.*

**வர்த்தக ஸ்பெஷல்**

*வர்த்தகத் துறையில் ஈடுபட்டு மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமென்று விரும்பியவர் மிகிர விக்கிரம ஆராச்சி. ஆனால், அவரது பெற்றோரின் விருப்பம் மாறாக இருந்தது. பெற்றோரின் விருப்பத்தையும் மீறி காது கேளாதோருக்கு உதவும் கருவிகளின் விற்பனையை ஆரம்பித்தார். பின்னர் மூக்குக் கண்ணாடி வியாபாரத்தையும் அத்துடன் இணைத்துக்கொண்டார்.*

*வெளிநாட்டு வருமானம் உள்நாட்டுக்குள் அனுமதிக்கப்படுவதைப்போல எமது முதலீடுகளை வெளிநாடுகளுக்கு எடுத்துச்செல்லவும் அனுமதிக்க வேண்டுமென்று கூறுகிறார் இவர்.*

*ரி.என்.எல். தொலைக்காட்சியில் மிகிர விக்கிரம ஆராச்சியை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்கிரமவும் 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர்.*

*செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.*

*கேள்வி:-* வர்த்தகத் துறையில் நீங்கள் கடந்து வந்த பாதையைப் பற்றி கூறமுடியுமா?

*பதில்:-* எனது சொந்த வியாபாரம் ஒன்றை நடத்தவேண்டுமென்று எனக்கு சிறு வயதிலிருந்தே ஆசை இருந்தது. எனது வர்த்தகப் பணியின் மூலம் மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமென்றும் விரும்பினேன். அதனால், காது கேட்க உதவும் கருவிகளின் வியாபாரத்தை ஆரம்பித்தேன். ஆரம்பத்தில் எனது பெற்றோர் அதனை விரும்பவில்லை. எனது சகோதரர்களைப் போல பொறியியலாளராக வரவேண்டும் என்பதே அவர்களின் விருப்பமாக இருந்தது. பின்னர் சிறிது காலம் கழித்து மூக்குக் கண்ணாடி வியாபாரத்தையும் ஆரம்பித்தேன்.

அந்தக் காலத்தில் காது கேட்க உதவும் கருவி ஒன்று ஐந்து அங்குல நீளம் வரை பெரிதாக இருந்தது. அதனை உள்நாட்டில் உற்பத்தி செய்ய முயற்சி செய்தும் முடியாமல் போய்விட்டது.

இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டிருந்த அந்த 77ஆம் ஆண்டு காலப் பகுதியிலும் அந்த உபகரணங்களை இறக்குமதி செய்யவேண்டி நேர்ந்தது.

*கேள்வி:-* நீங்கள் மக்களுக்கு சேவைசெய்ய விரும்பியதாகக் கூறினீர்கள். இந்த சேவைமனப்பான்மையும் வியாபாரமும் முரண்படுவதில்லையா?

*பதில்:-* இலங்கை ஒரு மிகச் சிறிய ஏழ்மையான நாடு. எனவே, முதலில் வாடிக்கையாளர் பாதுகாக்கப்படவேண்டும். மக்களுக்கு ஒன்றைக் கொடுத்து மற்றொன்றைப் பெறவேண்டும் இதனடிப்படையிலேயே நான் சேவை செய்கிறேன். எமது செல்வத்தில் இருந்தும், எமது நேரத்தில் இருந்தும் ஒரு சதவீதத்தை மற்றவர்களுக்காக எம்மால் ஒதுக்கிப் பணியாற்ற முடியுமாயின் அதுவே சிறந்த பணியாகிறது. அதுவே எமது வியாபாரத்தை வளர்த்துவிடும். எமது சமயமும் அதைத்தான் கூறுகிறது.

*கேள்வி:-* அரசாங்கம் செய்யவேண்டிய பல கடமைகளை நீங்கள் செய்கிறீர்கள். இது பற்றி நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?

*பதில்:-* "என்பிளவர் விலேஜ்" என்ற அரசசார்பற்ற நிறுவனத்தில் நான் தலைவராக உள்ளேன். ஐரோப்பிய நாடுகளிலிருந்து உதவிகளைப் பெற்றுக்கொண்டு எமது நாட்டு வறிய கிராமங்களில் வாழும் காது, கண் ஆகிய உறுப்புக்களில் குறை உள்ளவர்களுக்கு நாம் உதவி வழங்குகிறோம். நன்கொடையாக கிடைக்கும் பணத்தை வங்கியில் வைப்புச் செய்து அதிலிருந்து கிடைக்கும் வட்டியை சிறுவர்களுக்காகச் செலவிடுகிறோம். ஆனால், அந்தப் பணத்திற்கு நாம் வட்டி செலுத்தும் நிலையும் நேர்ந்துள்ளது. இது துரதிர்ஷ்டவசமானது.

நாம் ஒரு சமூக சேவையே செய்கிறோம். இதை அரசாங்கம் புரிந்துகொள்ளவேண்டும். மேலும் தேசிய வைத்தியசாலைக்கும் பல உதவிகளைச் செய்துள்ளேன். இவ்வாறாக பல்வேறு சமூக சேவைகளை செய்து வருகிறேன்.

*கேள்வி:-* சமூக சேவையில் ஈடுபடுபவர்கள் பல சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். அதேபோல வியாபாரத்திலும் பிரச்சினைகள் உள்ளனவா?

*பதில்:-* வெளிநாடுகளில் என்றால் மூக்குக்கண்ணாடி என்பது மருத்துவ சேவைக்குள் சேர்க்கப்பட்டு வரி அறவிடப்படுவதில்லை. ஆனால், இங்கு நிலைமை வேறாக உள்ளது. முன்னர் என்றால் பிளாஸ்டிக் கண்ணாடிகளை நாம் உற்பத்தி செய்தோம். இன்று நிலவும் கேள்விக்கு ஏற்ப எம்மால் கண்ணாடிகளை உற்பத்தி செய்ய முடியாதுள்ளது. அவ்வளவு பெரிய தொழிற்சாலைகள் எம்மிடம் இல்லை. அதேபோல கண்ணாடி "பிரேம்"களையும் இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது.

ஆனால், எமது நாட்டில் இன்னமும் பழைய வரிமுறையே உள்ளது. எனவே, நான் இன்னமும் வரி செலுத்த வேண்டி இருக்கிறது.

*கேள்வி:-* உங்கள் வியாபாரத்தை விரிவுபடுத்த என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்?

பதில்:- காது கேட்க உதவும் கருவிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை மாலைதீவில் ஆரம்பித்துள்ளேன். இந்தோனேஷியாவிலும் இவ்வாறான ஒன்றை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளேன். நாம் வர்த்தகர்கள் என்ற வகையில் உள்நாட்டில் மட்டுமே வியாபாரம் செய்யப் பழகியுள்ளோம். ஆனால், அவற்றை வெளிநாடுகளிலும் விரிவுபடுத்த பழகிக்கொள்ள வேண்டும். அதற்காக ஐரோப்பிய நாடுகளைப் பற்றியே சிந்திக்கக்கூடாது. அண்மையிலுள்ள சிறிய நாடுகளில் அது நடந்தாலேபோதும். அதற்காக அரசாங்கமும் உதவி வழங்க வேண்டும்.

*கேள்வி:-* வெளிநாடுகளுக்கு வியாபாரத்தை விஸ்தரிக்கும் போது முதலீடுகள் தொடர்பாக அரசாங்கம் வரையறை விதிக்கிறதா?

*பதில்:-* ஆம். ஆனால், சிலர் சாதுரியமாகப் பணத்தை வெளியில் எடுத்துச் செல்கின்றனர். எமது நாட்டுக்குள் வருமானம் வர அரசாங்கம் அனுமதிப்பதைப்போல பணத்தை வெளியில் கொண்டுபோய் முதலீடு செய்யவும் அனுமதிக்கவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுப்பது அவசியம்.

*கேள்வி:-* மருந்து விற்பனை மற்றும் வைத்திய உபகரணங்கள் தொடர்பாக அரசாங்கம் புதிய சட்டங்களை வகுத்துள்ளது. அவை உங்கள் வியாபாரத்தை பாதிக்கின்றனவா?

*பதில்:-* இந்தச் சட்டங்கள் காரணமாக மருத்துவ உபகரணங்களை விரைந்து இறக்குமதி செய்ய முடியாதுள்ளது. அத்துடன், புதிய சட்டங்கள் கொண்டுவரப்படும். குறிப்பிட்ட துறைசார்ந்த நிறுவனங்களும் சுங்க அதிகாரிகளும் அறிவுறுத்தப்பட வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் மிகிர விக்கிரம ஆராச்சி.

### மகாசிவராத்திரிக்கு முன்பதாக

# கேரதீவு - சங்குப்பிட்டி வீதியை போக்குவரத்துக்குத் திறந்துவிடுக!

## பாதுகாப்பு அமைச்சரிடம் அமைச்சர் மகேஸ்வரன் கோரிக்கை

கொழும்பு,ஜன.20

மகாசிவராத்திரி தினத்துக்கு முன்பதாக, கேரதீவு - சங்குப்பிட்டி நெடுஞ்சாலையை பொதுமக்கள் பாவனைக்காக மீளத் திறந்துவிடுமாறு இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் பாதுகாப்பு அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் வருமாறு:-

உலகெங்கும் வாழும் இந்து மக்கள் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை வேண்டி எடுக்கும் பெருவிழா மகாசிவராத்திரி ஆகும்.

இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள பல இந்து ஆலயங்களில் இவ்விழா நடைபெறுவதாயினும், நாயன்மார்களால் பாடல்பெற்ற வரலாற்றுப் பெருமைமிக்க புகழ்பூத்த திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் நடைபெறும் விழாவே ஈழத்தில் வாழும் சைவ மக்களுக்கு அதிமுக்கியத்துவம் வாய்ந்தது.

அந்த விழாவுக்கு, நாடெங்கிலுமிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகைதந்து சிவபெருமானை வேண்டி விரதமிருந்து வழிபாடு செய்வது பண்டுதொட்டு நடைபெற்று வரும் அதிஉன்னத விழாவாகும்.

திருக்கேதீஸ்வரத்தில் நடைபெறும் இவ்விழாவுக்கு யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து வருகைதரும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கேரதீவு - சங்குப்பிட்டி நெடுஞ்சாலையை பாவிப்பது இன்றியமையாத தேவையாகும்.

1990ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட யுத்தத்தின் பின்னர் இந்நெடுஞ்சாலை பொதுமக்கள் பாவனைக்கு தடைசெய்யப்பட்டுள்ளது. இந்நெடுஞ்சாலையைச் சூழவுள்ள கிராமங்களில் மீள்குடியமர்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையினால், இந்நெடுஞ்சாலையை தொடர்ந்தும் பொதுமக்கள் பாவனைக்கு தடைசெய்திருப்பது நியாயமற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து திருக்கேதீச்சரம் செல்லும் பக்தர்கள் கேரதீவு - சங்குப்பிட்டி பாதையை பயன்படுத்தாது வவுனியா மூலம் திருக்கேதீச்சரம் செல்வதாயின் அதிகளவு பணத்தையும் அதிகளவு நேரத்தையும் செலவிடவேண்டிய சிரமங்களுக்கு உள்ளாவார்கள்.

ஆகவே, கேரதீவு - சங்குப்பிட்டி பாதையை தாமதிக்காமல் திறந்துவிடுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

- என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

### வகுப்பறைத் தொகுதி அமைப்பு

தென்மராட்சி,ஜன.20

பளைப் பிரதேசத்தில் உள்ள இரு பாடசாலைகளுக்கு நிக்கொட் நிறுவனத்தினர் வகுப்பறைத் தொகுதிகளை அமைத்துக் கொடுக்கவுள்ளனர். பளை மத்திய கல்லூரி, பளை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை ஆகியவற்றுக்கே வகுப்பறைத் தொகுதிகள் அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ம-117)



யாழ்.சைவ பரிபாலன சபையினரின் நீராவியடி நாவலர் ஆச்சிரம முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு நிகழ்வை பிரதம விருந்தினரான யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் வே.ஞானகாந்தனின் பாரியார் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். (எ-152)

### முன்பள்ளிக்கு புதிய கட்டடம்

யாழ்ப்பாணம்,ஜன.20

யாழ் மாநகர சபையினால் நடத்தப்பட்டு வரும் நல்லூர் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள முன்பள்ளிக்கான புதிய கட்டட நிர்மாண வேலைகளுக்கு சபை வரவு - செலவு நிதியில இருந்து ரூபா 5இலட்சத்தை ஒதுக்கியுள்ளதாக மாநகர முதல்வர் செ.கந்தையன் தெரிவித்தார்.

தற்காலிகமாக தனியார் கட்டடத்தில் இயங்கிவரும் மேற்படி முன்பள்ளிக்கு மாநகரசபைக் காணியில் புதிய கட்டடத்துக்கான அத்திபாரக்கல் கடந்த பொங்கல் தினத்தன்று நடப்பட்டதாகவும் -

இந்தக் கட்டடத்திற்கு மேலதிகமாகத் தேவைப்படும் நிதியினை வழங்க நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் முன்வந்துள்ளார் என்றும் மேயர் மேலும் தெரிவித்தார். (எ-180)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மில் பாவனைக்குரிய பாவித்த பொலிசர்(சிறிது) சைனாகெர் - 2 பெட்டி, செப்பிறேற்றர், அமுதா கிறைன்ரர், ஈர அரிசி அரைக்கும் கிறைன்ரர், கொப்பறா எக்ஸ் பெலர்செற் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: சி.தர்ம லிங்கம், மடத்தடி கிழக்கு வீதி, கண்டி வீதி, சாவகச்சேரி. (12759)

மிகவும் நல்ல நிலையில் உள்ள கேம்பிறிச் (A-50) கார் (கறுப்பு நிறம்), 156 தொடரிலக்கமுடைய BAJAJ ஸ்கூட்டர் என்பன விற்ப னைக்குண்டு. தொடர்பு: யோகா, 78, K.K.S. வீதி, சுன்னாகம். (13400)

### வீடு விற்பனைக்கு

கொக்குவிலில் 4 பரப்புக் காணி யில் நல்ல பிரயோசனங்களுமுடைய தும் வெள்ளைக் கருங்கல் கிணறும், கடையுடனும் கூடிய விசாலமான வீடு உடனடியாக விற்பனைக்குண்டு (தரகர் தேவையில்லை). தொடர்பு: S.அரசரத தினம், சேச்லேன் (முதலி கோவிலடி), தாவடி, கொக்குவில். (13396)

### தவறிவிட்டது

ஞா.ஞானராஜா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.742531040V), வவுனியா நிரந்தர வதிவிட அனுமதிப்பத்திரம் என்பன யாழ்.நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.73, டேவிட் றோட், குருநகர் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (13445)

### மணமகள் தேவை

இந்து, 29வயது, 5'4" உயரம், விஞ் ஞான பட்டதாரி ஆசிரியர், தோஷ மற்ற 7 செவ்வாய், பாவம் 29, நட்சத திரம் உத்தரம் 3ஆம் பாதம் உள்ள மகனுக்கு ஏற்ற பெண்ணை எதிர் பார்க்கின்றனர். தொடர்பு: சாயி மெடிக் கல், சங்கத்தானை, சாவகச்சேரி. (சி-26143)

### தேவை

வெல்டிங் வேலை தெரிந்தவர் களும், உதவியாளர்களும் தேவை.

தொடர்பு:

M.T.K.வேக்சொப்

இல.40, நக்கா றோட், யாழ்ப்பாணம்

(I.C.R.C. முன்பாக) (13441)

### வைத்தியம்

செங்கன்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்பு நோய், பீனிசம், தலைப்பிடி, தலைகால் அவியல், சரும நோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபல்யமானவர்.

சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை வைத்திய கலாநிதி

சி.இராசரத்தினம்

121, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

தொலைபேசி எண்: 2459 (12788)

---

### வெள்ளி விழா நாயகன் பாராட்டுக்குரியவர்

ஈழத்தில் என்ஜோதிட முன்னோடியும் ஜோதிடத்தை ஜனரஞ்சகமாக்கிய வருமான வேலணை சோதிடர்

**திரு.V.A.சிவராசா**

(B.A.,B.Phil, Dip-in-Edu. SLPS)

சோதிடபுலத்தில் 25 ஆண்டுகள் நிறைவெய்தியதை மனமுவந்து பாராட்டுகின்றோம்.

பாபு குடும்பத்தினர்-நல்லூர்.

*விற்பனையாகின்றது!*


2003/2004 ராசிபலன்

"சுபானு வருஷம் உங்களுக்கு எப்படி?"

(வெள்ளிவிழா - நிறைவு வெளியீடு) (13443)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 15 - 10 - 1939

மறைவு 22 - 12 - 2002

## அமரர் வடிவேலு அருந்தவராசா

### (கிட்டினசாமி)

எமது குடும்பத்தின் குலவிளக்காய் திகழ்ந்து, பாசத்தோடு எம்மை வளர்த்து ஆறாத்துயரில் எம்மை வீட்டுச்சென்ற உங்கள் ஆசைமுகம் எம்மைவிட்டகலாது ஏங்குகின்றோம்.

22.12.2002 அன்று இறைபதம் அடைந்த வடிவேலு அருந்தவராசா அவர்களின் மறைவு கேட்டு ஓடோடிவந்து உதவி புரிந்தோருக்கும், தந்தி, தொலைபேசிமூலம் அனுதாபச்செய்திகள் அனுப்பியோருக்கும் எமது நன்றி யைத் தெரிவிப்பதுடன், நாளை (21.01.2003) செவ்வாய்க்கிழமை கீழ்க் காணும் முகவரியில் உள்ள இல்லத்தில் இடம்பெறவுள்ள அன்னாரின் வீட்டுக் கிருத்தியம் ஆத்மசாந்திக்கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறவுள்ள மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.*

கொத்தியகாடு, தொண்டமானாறு.

மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள், (13456) மைத்துனர்கள், மைத்துனிமார்.

---

## இரண்டாம் ஆண்டு நினைவுகள்



அமரர்

முத்துத்தம்பி இராஜநாயகம்

மலர்வு 20.10.1938

உதிர்வு 09.02.2001

*அன்பெனும் கூடாய் வாழ்ந்தோம் ஐயா!*

*எமை பாதிவழியே பரிதவிக்கவிட்டு எங்கு சென்றீர்?*

*சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றேன்!*

\- மனைவி.

கோண்டாவில் கிழக்கு, இருபாலை றோட், கோண்டாவில். (13453)

---

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 18 - 03 - 1964

உதிர்வு 23 - 01 - 2000

## அமரர் சண்முகராசா இந்திரகுருபரன்

(இந்திரன்)

*(உரிமையாளர் நியூ வெஸ்கோ கிறீம் ஹவுஸ்)*

திதி: 20-01-2003

*விண்ணிலே முழுநிலா இடைஇடையே தான்வரும் - எங்களின்*
*கண்ணிலே நீங்களோ எந்நாளும் பவனிதான்*
*நிலத்திலே நம் வீட்டில் தங்களின் சுவடுதான் - அந்தச்*
*சுவட்டில் பதிந்திட்ட நினைவுதான் நம் வாழ்வு.*

உங்கள் பிரிவால் துயருறும்:

*இணுவில் மேற்கு, இணுவில்.* (13451)

மனைவி, பெற்றோர், சகோதரர், மாமி, மைத்துனர்.

---

## மரண அறிவித்தல்கள்

### கந்தசாமி வேல்சாமிபாலன்

பண்டத்தரிப்பு, செட்டிய குறிச்சியைப் பிறப்பிடமாகவும் மிருசுவில் வடக்கை வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி வேல்சாமிபாலன் 18.01.2003 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி - கமலாம்பிகை தம்பதிகளின் அன்பு மகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் மிருசுவில் தம்பையா-வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் லோஜிதா, பாஸ்கரன் (கனடா), துஸ்யந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் நடராசா ஜீவகுமா ரின் (கனடா) அன்பு மாமனாரும் சிவமணிநாயகம், பேபிச்சந்திரா (பண்டத் தரிப்பு), இந்திராணி (மட்டுவில்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தர்ம திலகர் (பண்டத்தரிப்பு), பாலசுப்பிரமணியம் (அல்வாய் தெற்கு), பாலேந் திரன் (மிருசுவில்), பாலச்சந்திரன் (கனடா), மகேஸ்வரி (ஜேர்மனி), பரமேஸ்வரி (P.H.M.) பருத்தித்துறை) ஆகியோரின் மைத்துனரும் வன்னியசிங்கம் (ஜேர்மனி), தர்மலிங்கம் (மிருசுவில்), சிவராணி (அல்வாய்), அகிலசாந்தா (மிருசுவில்), சிவசோதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20-01-2003) திங்கட்கிழமை பி.ப.2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*மிருசுவில் வடக்கு.* (13152) பாலேந்திரன் (பெரியதம்பி)

### திருமதி
### வல்லிபுரம் நாகாம்பிகை

பருத்தியடைப்பு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வல்லிபுரம் நாகாம்பிகை அவர்கள் 18-01-2003 சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பருத்தியடைப்பு இரண வைத்தியர் வல்லிபுரம் அவர்களின் அன்பு மனைவியாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21-01-2003) செவ்வாய்க் கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*43, பசல்ஸ் ஒழுங்கை, வெள்ளவத்தை.* வ.அம்பலவாணநாதன் (மகன்) வ.நிமலநாதன் (மகன்) (13447)

*12A, மாட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.* திருமதி குணாம்பிகை மணிவாசகம் (மகள்)

### திருமதி
### பாலசிங்கம் குணபூசணம்

வேலணை கிழக்கு, 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி பாலசிங்கம் குணபூசணம் (ராசம்மா) அவர்கள் 18-01-2003 சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை பாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-செல்லம் தம்பதிகளின் அருமை மகளும் கணபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதி களின் மருமகளும் காமாட்சிப்பிள்ளை, பாலா யோகநாதன் (ஆசிரியர்), காலஞ்சென்ற பரமநாதன் (அரசன்) மற்றும் பாலா செல்வம் (நகைமாளிகை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சு.தர்மலிங்கத்தின் அன்புச் சகோதரியும் சிவலோகநாதன், சித்திரா, விஜயகுமாரி, ரேணுகா ஆகியோரின் அன்பு மாமியாரும் சஞ்சீவி, மதீசன், லாவண்யா, சரண்யா, கிஷோக், யோக்ஸ்ணா, குணாஜி, ராஜாஜீ, அயுன்ஜி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 19-01-2003 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிமுதல் 9.00மணிவரை 4164 Sheppard Ave.East இல் அமைந்துள்ள Ogden Funeral Home இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று 20.01.2003 திங்கட்கிழமை காலை 10.00மணிமுதல் 11.00மணிவரை அஞ்சலிக்காக பார்வைக்கு வைக்கப்பட்டு 12 மணியிலிருந்து 1.00மணிவரையில் Donmills+ Steels சந்திப்பிற்கு சமீபமாக அமைந்துள்ள Hiahland Memerial Gardenஇல் இன்று இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளும் படி தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:

திருமதி சிவலோகநாதன (416) 261 9019

பாலா யோகநாதன் (416) 286 2000

(13446) பாலா செல்வம் (416) 264 4000

---


## ரோசாப்பூ மார்க் சந்தனாதித் தைலம்

RADHA PERFUMERY & RADHA PRODUCTS

எமது தயாரிப்புகளின் அமோக விற்பனையைக்கண்டு ஏராளமான "போலி சந்தனாதித் தைலம்" சந்தையில் இருப்பதால் எமது சந்த னாதித்தைலத்தில் "ராதா புரடக்ஸ்" என்ற நீலம், சிவப்புக் கலந்த மூடியைக் கவனித்து வாங்கும் வண்ணம் பாவனையாளர்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

### இதுபோலவே

ராதா மின்சார மருந்தும் போலித் தயாரிப்புகள் உலாவுவதால், ராதா மின்சார மருந்துப் பெட்டியைத் திறந்து "ராதா புரடக்ஸ்" என்ற நீலம், சிவப்புக் கலந்த மூடியைக் கவனித்து வாங்கும் வண்ணம் பாவனையாளர்களை அன்புடன் கேட்டுக்கொகின்றோம்.

## எஸ்.சுப்பிரமணியம் அன் கம்பனி

160, செட்டியார் தெரு, கொழும்பு-11. (13437) 34, ஆடியபாதம் வீதி, யாழ்ப்பாணம்.

# வாசகர் திருமுகம்

## கல்வியியல் கல்லூரிகள் பற்றிய மேலதிக விளக்கம் அவசியம்

இலங்கையின் பல்கலைக்கழகங்களுக்கு அடுத்தபடியாக உள்ள உயர் கல்வி நிறுவனங்களாக கல்வியியல் கல்லூரிகள் விளங்குகின்றன. இவை யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு உள்ளிட்ட நாட்டின் பல பாகங்களிலும் உள்ளன.

இக்கல்வியியல் கல்லூரிகளுக்கு வருடம் தோறும் மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். எனினும், கல்வியியல் கல்லூரிகளுக்கு மாணவர்கள் எவ்விதம் அனுமதிக்கப்படுகின்றனர் என்பது இன்னும் பலருக்கு புரியாத புதிராகவே இருந்துவருகிறது. இன்னும் சிலருக்கு கல்வியியல் கல்லூரி என்று ஒன்று உண்டா என்று கூடத் தெரியாமல் இருக்கிறது. இவைபோன்ற காரணங்களால் க.பொ.த. உ/த பரீட்சையில் போதியளவு புள்ளிகளைப்பெற்றும்கூட பல மாணவரின் கல்வியியல் கல்லூரி அனுமதி விரயமாகிறது.

எனவே, கல்வியியல் கல்லூரிகளுக்கு மாணவர் எவ்வாறு உள்வாங்கப்படுகின்றனர், பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாவது போன்று விசேட பாடத் தெரிவுகள் உண்டா? அது எவ்வகையான பாடங்கள் போன்ற விவரங்கள் அடங்கிய விளக்கத்தை யாழ்கல்வியியல் கல்லூரி பீடாதிபதி வழங்கவேண்டும் என எதிர்பார்க்கிறேன்.

*சாவகச்சேரி.* - **சீலன்.**

## கழிவுப்பொருள்களை அகற்ற நடவடிக்கை எடுப்பார்களா?

யாழ்.மாநகரசபை அலுவலகத்திற்கு மிகவும் அண்மையாகவுள்ள நாயன்மார் வீதி, கன்னார வீதி என்பவற்றில் உள்ள பெரும்பான்மையான வீடுகள் சிறிய காணிப் பரப்புகளுக்குள்ளேயே அமைக்கப்பட்டிருப்பதால் உருவாகும் குப்பை கூளங்கள், கழிவுப்பொருளகள் என்பவற்றை அகற்றுவதற்கு உரிய இடவசதி இன்மையால் வீதியின் குறிப்பிட்ட ஓர் இடத்தில் குவித்து வந்தோம். இதுவரைகாலமும் அவை யாழ்மாநகர சபை ஊழியர்களால் தினமும் அகற்றப்பட்டுவந்தன. ஆனால், இதன்பின் ஒரு சிலர் அந்த இடத்தில் வெட்டிய மரங்கள், தடிகள் என்பவற்றையும் வீசத் தொடங்கினர். இதனால் மாநகரசபை ஊழியர்கள் தம்மால் இவற்றை இனிமேல் அகற்றமுடியாது என்று கூறிவிட்டனர். எனவே, நாம் பிற நகரங்களில் உள்ளதுபோல் ஒவ்வொருவரும் தத்தமது வீடுகளின் முன்னே கழிவுப்பொருள்களைப் பைகளில் இட்டு வைக்கத் தீர்மானித்துள்ளோம்.

யாழ்.குடாநாட்டில் பலவிதத் தொற்று நோய்களும் பரவிவரும் நிலையில் இக்கழிவுப்பொருள்களை நாளாந்தம் அகற்றி உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம். எமது பிரதேசம் யாழ்.மாநகர சபை அலுவலகத்திற்கு மிகவும் அண்மையில் உள்ளது. தற்போதைய சமாதான சூழ்நிலையில் பெருமளவு வெளியூர் மக்களும் வந்து செல்வதால் யாழ்.மாநகரசபைப் பிரதேசத்தை தூய்மையாக வைத்திருப்பதில் சபையின் கடப்பாடு அதிகமாக உள்ளதென்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

**நாயன்மார் வீதி, கன்னார வீதி**
**வாழ்மக்கள் சார்பில்**
**நலன் விரும்பி**

## பஸ்களில் இடநெருக்கடி தீருமா?

அண்மையில் ஏற்பட்ட சமாதான நடவடிக்கை காரணமாக யாழ். நகரின் சனத்தொகை கணிசமான அளவு அதிகரித்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இதனால் போக்குவரத்திலும் அதிக நெரிசல் ஏற்பட்டுவிட்டது.

குறிப்பாக வடபிராந்திய இ.போ.ச பஸ்வண்டிகளிலும் சமாளிக்க முடியாது பயணிகள் கஷ்டப்படுகின்றார்கள். இதனால் மதகுருமார்கள், வயோதிபர்கள், அங்கவீனர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் இருக்கை இல்லாமல் பயணிப்பது மிகவும் கவலையளிக்கின்றது. எனவே, கொழும்புப் பகுதி பஸ்வண்டிகளில் இவர்களுக்கென இருக்கைகள் ஒதுக்கப்பட்டதுபோல் வடபகுதி இ.போ.ச. பஸ்வண்டிகளிலும் இருக்கைகள் ஒதுக்கிக்கொடுத்தால் இது ஒரு மனிதாபிமான நடவடிக்கையாக இருக்கும்.

வடபிராந்திய இ.போ.ச. அதிகாரிகளை இதை நிறைவேற்றித்தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

*வேலணை.* **ஐ.பாலசுப்பிரமணியம்**

## கால அவகாசம் தேவை!

யாழ்.பல்கலைக்கழக 2001ஆம் ஆண்டு கலை, வணிக முதற் கலைத்தேர்வுகள் 2002ஆம் ஆண்டு ஏப்ரல், ஓகஸ்ட், டிசெம்பர் மாதங்களில் நடைபெறும் என எதிர்பார்த்திருந்து தற்பொழுது 2003 மாசியில் நடைபெறும் என பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக எப்பொழுது பரீட்சை நடைபெறும் எனத்தெரியாது இருந்தமையால் நாம் கற்பதில் உற்சாகம் இழந்திருந்தோம். தற்பொழுது குறுகியகால அவகாசத்தில் பரீட்சைகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எம்மில் பலர் வேலைக்குச் செல்பவர்களாக இருப்பதனாலும் பெப்ரவரி மாதத்தில் உலகக்கிண்ண கிரிக்கட் போட்டிகள் நடைபெற விருப்பதனாலும் இப்பரீட்சைகள் ஏப்ரல் விடுமுறையின்போது நடைபெற்றால் எமக்கு மிகவும் உதவியாக இருக்கும். வேறும் பல நாடுகளில் உலகக் கிண்ணத்தொடர்களின்போது பல பொதுப்பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்ற அடிப்படையிலும் சரியாக எப்பொழுது இப்பரீட்சைகள் நடைபெறும் என எமக்கு முன்பே தெரியாமையாலும் எமக்கு பரீட்சைத் தயார்ப்படுத்தலுக்கு கால அவகாசம் குறைவாக உள்ளமையாலும் விண்ணப்பங்கள் கோரப்பட்டதிலிருந்து இரண்டு அல்லது மூன்று மாதங்கள் கால அவகாசத்தின் பின் அதாவது ஏப்ரலில் பரீட்சைகள் நடைபெற்றால் எமக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

அல்லது பிரதி வருடங்கள்தோறும் குறித்த காலப்பகுதியிலேயே பரீட்சைகள் நடைபெற்று வந்தால் நாம் அக்காலத்திற்கு ஏற்றவாறு எம்மை பரீட்சைக்குத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கமுடியும். எமது நிலைமையை உணர்ந்து வெளிவாரிப் பரீட்சை பிரிவினர் எமது இந்த வேண்டுகோளை சாதகமாகப் பரிசீலிப்பார்கள் என நம்புகின்றோம்.

**யாழ்.பல்கலைக்கழக**
**2001 பிரிவு வெளிவாரி மாணவர்கள்.**

## கிளிநொச்சி அரச அதிபரின் அறிவிப்பு

தென்மராட்சி,ஜன.20

பளைப் பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்து வலிகாமம், வடமராட்சி ஆகிய இடங்களில் இயங்கிய அனைத்து அரச திணைக்கள, கூட்டுறவு அலுவலகங்கள் உடனடியாக பளையில் இயங்க வேண்டுமென கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் உத்தரவிட்டுள்ளார்.

பிரதேசத்தைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையானோர் தற்போது தமது இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ளதால் வடமராட்சி, வலிகாமம் ஆகிய இடங்களில் பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த உப அலுவலகங்கள் இயங்கத் தேவையில்லை என்றும் - அவர் அறிவித்துள்ளார்.

கடந்த வாரம் கிளிநொச்சியில் இடம்பெற்ற அத்தியாவசிய சேவைகள் கூட்டத்தில் அரச அதிபர் இந்த உத்தரவைப் பிறப்பித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## மருதங்கேணி சந்தை தற்காலிக கொட்டகையில்!

வடமராட்சி கிழக்கு,ஜன.20

மருதங்கேணி பொதுச் சந்தை தற்காலிக கொட்டகையில் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

வாரந்தோறும் செவ்வாய், வெள்ளி, ஞாயிறு ஆகிய தினங்களில் சந்தை இயங்கிவருகின்றது.

எனினும், யுத்தத்தினால் சேதமடைந்த சந்தைக் கட்டடங்கள் இதுவரை புனரமைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-182)

## குருநகரில் சனியன்று கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்பட்டன

குருநகர்,ஜன.20

குருநகர் வீதிகளில் திரியும் கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டு வருகின்றன.

யாழ்.மாநகர சபையினர் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

குருநகர் தண்ணீர்த்தாங்கி வீதி, மத்திய கிழக்கு வீதிகளில் திரிந்த நாய்கள் பல நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அழிக்கப்பட்டன.

மக்கள் பயணிக்கும் வீதிகளில் திரியும் இந்நாய்களால் பயணிப்பவர்கள் அச்சுறுத்தலுக்குள்ளாகி வருவதுடன், நாய்களின் எச்சங்கள் காரணமாக அப்பகுதியில் சுகாதாரத்துக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுவருவதாகவும் - பயணிப்போர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-51)

## வடமராட்சி கிழக்கு கடலில் இறால் 'சீசன்' ஆரம்பம்

வடமராட்சி கிழக்கு,ஜன.20

வடமராட்சி கிழக்கு கடலில் இறால் 'சீசன்' ஆரம்பித்துள்ளது.

இதேவேளை-

மேற்படி பகுதிக் கடலில் பிடிக்கப்படும் ஒரு கிலோ இறால் ரூபா 300 வீதம் கடற்றொழிலாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு தென்னிலங்கைக்கு அனுப்பப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-182)

## பளை ஆஸ்பத்திரி துப்புரவு செய்யப்படுகிறது

யுத்த அனர்த்தங்களால் பலத்த சேதங்களுக்கு உள்ளான பளை ஆஸ்பத்திரி துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

ஆஸ்பத்திரி வளவில் காணப்பட்ட கண்ணிவெடிகள் அண்மையில அகற்றப்பட்டதை அடுத்து சேதம் அடைந்த கட்டட இடிபாடுகள் துப்புரவு செய்யப்பட்டன.

ஆஸ்பத்திரிக்குச் செல்லும் வீதியில் காணப்பட்ட பாரிய குழி மூடப்பட்டு வீதியும் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவு தற்போது தனியார் கட்டடமொன்றில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்கள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ம-117)

## வனவளப் பாதுகாப்புக்கு வன்னியில் ஏற்பாடு


ஆஸ்திரேலியாவில் இருந்து வன்னிக்கு விஜயம் செய்துள்ள வனவள பாதுகாப்பு அதிகாரிகளுக்கும், தமிழீழ வனவள பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்றுள்ளது.

இக்கலந்துரையாடலில் வனவளப் பாதுகாப்பு முறைமைகள் பற்றியும், வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்பட வேண்டிய வனவளப் பாதுகாப்புப் பணிகள் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-8)

## கல்விச்சாலைக் காட்சிகள்




ஆனைக்கோட்டை உயரப்புலம் ஐக்கிய சனசமூக நிலைய முன்பள்ளி சிறார்களின் ஒளிவிழா அடைக்கலநாயகி கலையரங்கில் அண்மையில் நடைபெற்றபோது சிறுமிகள் நடன நிகழ்வில் பங்குபற்றியதை படத்தில் காணலாம். (எ)



கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்துக்கு யாழ்.நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் ஒரு தொகுதி தளபாடங்களை அண்மையில் அன்பளிப்பாக வழங்கியபோது எடுக்கப்பட்ட படம் இது. (எ)



காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற பழைய மாணவர் சங்க ஒன்றுகூடல் நிகழ்வில் இடம்பெற்ற கல்லூரி மாணவிகளின் நடன நிகழ்வைப் படத்தில் காணலாம். (எ-73)



கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்துக்கு ஒரு தொகுதி தளபாடங்களை அன்பளிப்புச் செய்த பழைய மாணவர் இருவரின் தந்தையார் பாடசாலை உப அதிபர் எஸ்.அருணகிரிவாசனால் மாலை அணிவித்து கௌரவிக் கப்படுவதைப் படத்தில் காணலாம். (எ)

# மாணவர் தகைமை விருத்தி அறிக்கைகளுக்கு பரிசு

அச்சுவேலி,ஜன.10

ஜி.சீ.ஈ.(உயர்தர) வகுப்பு மாணவர்கள் மத்தியில் நடைபெறும் "வாழ்க்கைத் தகைமை விருத்திச் செயற்றிட்ட" ஆய்வுகளில் சிறந்த ஆய்வு அறிக்கைகளுக்கு பரிசு வழங்கப்பட உள்ளது.

ஜி.சீ.ஈ.உயர்தர வகுப்பு மாணவர்கள் மத்தியில் கற்பித்தல் செயற்பாடுகளை மேம்பாடடையச் செய்யும் வகையில் வாழ்க்கைத் தகைமைச் செயற்றிட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப் படுகின்றன.

ஜி.சீ.ஈ.உயர்தர வகுப்பு மாணவர்கள் ஒவ்வொருவரும் தனியாள் நிலையிலும் குழுநிலையிலும் இரண்டு வகையில் செயற்றிட்டங்களை நிறைவு செய்து அறிக்கைகளை முன்வைக்க வேண்டும்.

வாழ்க்கைத்தகைமை விருத்திச் செயற்றிட்ட ஆய்வுகள் கோட்ட மட்டத்திலும், வலய மட்டத்திலும் தெரிவு செய்யப்பட்டு, பரிசில்கள் வழங்கப் படவுள்ளன. (ஒ-11)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

13.01.2003

HAPPY BIRTHDAY



### செல்வி அட்சயா

சண்முகதாசன் சந்திரிகா தம்பதிகளின் செல்வப் புதல்வி அட்சயா

தனது முதலாவது பிறந்தநாளை 13.01.2003 அன்று கனடாவில் தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். அன்பு அப்பா, அம்மா, பூட்டி, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, மாமாமார், சித்தப்பாமார், சித்திமார், அன்பு அத்தையும், மச்சான் சிறீராம் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அன்புடன் அட்சயாவை நயினை நாக பூசணி அம்மனின் அருளால் பல்கலையும் பெற்று சிறப்புடன் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்:
(C/26140) சித்தப்பாமார் (கொழும்பு).

## ஆலய உண்டியலில் பணம் திருட்டு

வடலியடைப்பு பாரந்தனை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் உண்டியல் பெட்டி உடைக்கப்பட்டு அதிலிருந்த பணம் திருடப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு வேளையில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

## பல்கலைக்கழக மாணவருக்கு!

யாழ்ப்பாணம்,ஜன.20

யாழ்.பல்கலைக்கழக அனைத்து பீட மாணவர்களுக்கான கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளதாகவும் -

இதில் சகல மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறும் - மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (ஓ)

## விவரம் சமர்ப்பிக்க கோரிக்கை

அச்சுவேலி,ஜன.20

வலி.கிழக்கு பிரதேசசபை எல்லைக்குள் உள்ள சனசமூக நிலையங்களின் புதுவருட நிர்வாகிகள் தெரிவினை நடத்தி, அதன் விவரத்தை இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு வலி.கிழக்கு சனசமூக நிலையங்களின் சமாசச் செயலாளர் த.மார்க்கண்டு அறிவித்துள்ளார்.

சனசமூக நிலையங்களின் புதுவருடத்துக்கானபதிவுகளை மேற்கொண்டு, உதவி நிதி வழங்குவதற்கு வசதியாக புதியநிர்வாகிகள் தெரிவு அறிக்கையை தலைமை அலுவலகத்தில் சமர்பிககுமாறும் அவர் கேட்டுள்ளார். (எ-11)


### தேவை

வெளிநாட்டு நிறுவனம் ஒன்றிற்கு யாழ்.மாநகரசபை எல்லைக்குள் 5 பரப்புக்குட்பட்ட காணி அல்லது கட்டடத்துடன் கூடிய காணி விலைக்குத் தேவை.

தொடர்பு:-
வி.இல.1754,
மே/பா உதயன். (13458)



உ
சிவமயம்
சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் - இலங்கை
INTERNATIONAL HINDU RELIGIOUS PRIESTS' ORGANIZATION - SRILANKA

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றிய அனுசரணையுடன்
இந்து சமய விவகார அமைச்சினால் இன்று
திறப்பு விழா நடைபெறும் குருகுல கலாசாலை
மாலை நிகழ்வுகள

மாலை
3.00 மணி - மங்கல இசை
V.K. பஞ்சமூர்த்தி குமரேஸ் குழுவினர்
4.00 மணி - மங்கல விளக்கேற்றல்
4.05 மணி - வேத, திருமுறைப்பாராயணம்
4.20 மணி - ஆசியுரை:
குருபீடாதிபதி அவர்கள்
4.30 மணி - தலைமையுரை:
அமைப்பின் தலைவர்
4.40 மணி - கௌரவிப்பு நிகழ்வுகள்
4.50 மணி - சிறப்பு விருந்தினர் உரை
5.00 மணி - பாராட்டுரைகள்
5.20 மணி - நன்றியுரை
5.30 மணி தொடக்கம் இன்னிசை விருந்து
பாட்டு - சங்கீத சாகரம்
பிரம்மஸ்ரீ. சோ. உமாரமணசிவாச்சாரியார்
வயலின் - இசை ஞான திலகம்
திரு. உ. ராதாகிருஷ்ணன்
மிருதங்கம் - மிருதங்கமாமணி
திரு. கண்ணதாசன்
கடம் - திரு. சதா. வேல்மாறன்
கஞ்சிரா - கலாவித்தகர் கி. அனந்தகோபன்

இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம்
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

சர்வதேச இந்துமத குருமார்
(13463) ஒன்றியம்.


# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி வயிரமுத்து

நயினாதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நாவாந்துறை 3 ஆம் குறுக்குத்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி வயிரமுத்து நேற்றுமுன்தினம் (18.01.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் யோகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து மற்றும் முருகேசு, அமரரான முத்துவேலு (கணக்காளர்) ஆகியோரின் சகோதரனும், தவமணிதேவி, செல்வரத்தினம், சறோஜினிதேவி (ஹொலண்ட்), இராசரத்தினம் ஆகியோரின் தந்தையும், ஜெகநாதன் (பணிப்பாளர், CARE, மட்டக்களப்பு), நாகேந்திரம்பிள்ளை (ஹொலண்ட்), சீராளதேவி, மரியரெத்தினம் (பேபி) ஆகியோரின் மாமனாரும், விவேகானந்தன் (கணனி விரிவுரையாளர்), மாதினி (B.A. ஆசிரியர் - கொழும்பு), சுவிஸைச் சேர்ந்த சாந்தி, விமல், ஆனந்தன், தர்சினி பிரான்ஸைச்சேர்ந்த ஜெயந்தி, சுரேன் மற்றும் ராஜினி, பிரபாகர் (பிரபா தையல்கம் - யாழ்.) மாலினி, பிரபாகரன் (CARE, மட்டக்களப்பு), யாழினி (CARE), ஜனனி, டினேஸ் (கனடா), கிஷா, கீர்த்தனா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2003) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*3ஆம் குறுக்குத்தெரு,*
*நாவாந்துறை.* (13465)
தகவல்:
வ.இராசரெத்தினம் (மகன்)

## கந்தையா இராசையா

அல்வாய் தெற்கு, ஐங்கரபதியை (மயிலிட்டி) சேர்ந்த கந்தையா இராசையா (ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர் - கட்டைவேலி தெங்குபனம் பொருள் கூட்டுறவுச்சங்கம்) அவர்கள் நேற்று (19.01.2003) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - நாகமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பு - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் தவமணிதேவியின் அன்புக் கணவரும் இதயதேவி - ரவிநதன், ஜெயதேவி - செல்வராசா, சிவதேவி - புஸ்பகேந்திரன் (சுவிஸ்), ஜீவதேவி - உதயரத்தினம் (பிரதேசசபை, உடுப்பிட்டி), இராசையா ஐங்கரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இரத்தினம் செல்லக்குட்டி, தங்கவேல் இராசம்மா, பாக்கியம் அரியகுட்டி, கந்தையா தங்கவேல், கந்தையா பாலகிருஷ்ணன் ஆகியோரின் சகோதரரும் தம்பு இராசதுரை, Dr. தம்பு துரைராசா, கமலாதேவி கணேசலிங்கம், தம்பு தமேந்திரராசா (அதிபர் - வல்வை, சிவகுரு வித்தியாலயம்), தம்பு செல்வநேசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் மாரவிநதன் (இ.போ.ச., பருத்தித்துறை), ப.செல்வராசா (டுபாய்), செ.புஸ்பகேந்திரன் (சுவிஸ்), ஐ.உதயரத்தினம் (பனம்பொருள் அபிவிருத்திச்சபை,யாழ்.) ஆகியோரின் அன்பு மாமனாரும், ர.ராஜிதா, ர.இதயநதன், ர.மீனுதா, செ.லக்சிதா, செ.லக்ஷிதன், பு.மானஷா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2003) திங்கட்கிழமை காலை 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பங்கு வேம்படி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஐங்கரபதி,*
*அல்வாய் தெற்கு.* (13464)
தகவல்:
குடும்பத்தினர்.

## முத்துலிங்கம் தேவபாலன்

*(ஜனனி ஸ்ருடியோ - சாவகச்சேரி)*

சாவகச்சேரி வடக்கு, மீசாலை ஐயா கடையடியைச் சேர்ந்த முத்துலிங்கம் தேவபாலன் நேற்று (19.01.2003) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமடைந்துள்ளார்.

அன்னார் முத்துலிங்கம் - மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் நிர்மளினியின் பாசமிகு கணவனும் சண்முகானன், அருளினி, வகிதா, தேசிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேந்திரன் (கனடா), மனோகரன் (கனடா), மகேஸ்வரன் (சாவகச்சேரி நகரசபை) மனோரஞ்சினி (கனடா), சுவர்ணன் (கனடா), ஜெகதாஸன் (கனடா), ஆகியோரின் அன்பு சகோதரனும் கணேசலிங்கம் - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

*ஐயா கடையடி,*
*மீசாலை.* (13467)
தகவல்:
முத்துலிங்கம் மகேஸ்வரன் (சகோதரர்)


எங்கும் பார்த்திராத..!
எங்கும் வாங்க முடியாத...!

பாதிக்குப் பாதி விலையில்

காவேரியின்

☆சாறீஸ் ரகங்கள்
☆பிறிண்டெற் மெற்றீரியல்
☆செக் மெற்றரியல்
☆பிறிண்டெற் சீத்தை
☆BOX சேட்
☆சேட்டிங் சூட்டிங்.

மற்றும்
அனைத்து ஜவுளி
வகைகளையும்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

காவேரி சில்க்ஸின்
மலிவு விற்பனை அகம்
77, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

மா பெ ரு ம் ம லி வு வி ற் ப னை

15ஆவது ஆ ண் டு நி றை வை யொ ட் டி

(C-26151)

# ஃபீஃபா தரவரிசையில் ஆப்கான்

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் (ஃபீஃபா) தரவரிசையில் முதற்தடவையாக ஆப்கானிஸ்தான் அணியும் இடம்பெற்றுள்ளது. 20 வருடங்களின்பின் சர்வதேச போட்டிகளில் ஆப்கானிஸ்தான் பங்குபற்ற ஆரம்பித்துள்ளது. ஃபீஃபாவின் புதிய தரப்படுத்தல் பட்டியலில் 7 புள்ளிகளுடன் 204ஆவது இடத்தைப் பெற்றுள்ளது அந்த அணி.

கடந்த புதனன்று இப்பட்டியல் வெளியிடப்பட்டது.

உலகச் சம்பியனான பிரேஸில் அணி 856 புள்ளிகளுடன் இப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. பிரான்ஸ் அணி 787 புள்ளிகளுடன் இரண்டாமிடத்திலும் ஸ்பெயின் அணி 780 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

ஆப்கானிஸ்தான் இறுதி இடம் பெற்றுள்ளமையை மொன்டஸ்ரேட் அணிக்கு மகிழ்ச்சியளிக்கும் விடயமாகும். 203ஆவது இடத்திலுள்ள இந்த அணி இதுவரை இறுதி இடத்தில் இருந்தது.

ஃபீஃபா தரவரிசையின் முதல் 10 இடங்களில் 9ஆவது இடத்திலிருந்த துருக்கி 7ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

இங்கிலாந்து அணி 7ஆவது இடத்திலிருந்து 8ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது. மெக்ஸிகோ அணி 8ஆவது இடத்திலிருந்து 9ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

உலகில் 20ஆவது இடத்தைப் பெற்ற தென்கொரியா ஆசிய அணிகளில் முதலிடம் வகிக்கிறது.

அண்மையில் இந்தோனேஷியாவில் நடைபெற்ற 'டைகர்' கிண்ணப் போட்டிகளையடுத்து இந்தோனேஷிய அணி 26 இடங்களைக் கடந்து 84 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. (எ-5)

## கரபந்தாட்டம்

யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான கரபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் இன்று முதல் 4 தினங்கள் கொய்யாத்தோட்டம் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இன்று பி.ப. 3.00 மணிமுதல் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரங்கள் வருமாறு:-

* சென்.றோக் விளையாட்டுக் கழகம் எதிர் கே.சி.சி. விளையாட்டுக் கழகம்.
* ஐங்கரன் விளையாட்டுக் கழகம் எதிர் ஜெஹ்லைனஸ் விளையாட்டுக் கழகம்.
* குருநகர் விளையாட்டுக் கழகம் எதிர் அ.அ. இளையோர் விளையாட்டுக்கழகம்.
* பாரதி விளையாட்டுக்கழகம் எதிர் நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம்.
* யமகா விளையாட்டுக் கழகம் எதிர் திருவள்ளுவர் விளையாட்டுக் கழகம். (எ-5)

## மெய்வண்மைப் போட்டிகள்

வலி.வடக்கு,ஜன.20

யாழ்.மாவட்ட அமெச்சூர் மெய்வன்மைச் சங்கம் நடத்தும் 2002ஆம் ஆண்டுக்கான மெய்வன்மைப் போட்டிகள் அடுத்த மாதம் முதலாம், இரண்டாம் திகதிகளில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் கலந்துகொள்வதற்காக ஏற்கனவே விண்ணப்பங்களை அனுப்பியவர்கள் கலந்துகொள்ளமுடியும் என சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (எ-86)

# இலங்கை சதுரங்கச் சம்பியனை யாழ்ப்பாண வீரர் தோற்கடித்தார்

யாழ்ப்பாணம்,ஜன.20

இலங்கை தேசியச் சதுரங்கக் கழகங்களுக்கிடையிலான சதுரங்கப் போட்டியில் இலங்கைச் சம்பியனை யாழ்.வீரர் வெற்றி கொண்டார்.

இப்போட்டியில் விஸ்ஸி ஆனந்த் சதுரங்கக் கழகம் சார்பில் யாழ்.வீரர் வீ.ரி.எஸ்.சிவோதயன் பங்கேற்றார். இறுதியாட்டத்தில் இலங்கை சதுரங்க சம்பியனான நிரோஸ் டி சில்வாவை அவர் எதிர்கொண்டார்.

இந்த ஆட்டத்தில் 16ஆவது நகர்த்தலின்போது ஆட்டத்தை சமன் செய்துகொள்ள சிவோதயன் முன்வந்தார். ஆனால் இலங்கை சம்பியன், அதனை நிராகரித்தார். அத்துடன், சிவோதயனை தோற்கடிக்க அவர் பிரயத்தனப்பட்டார். ஆயினும், 4 மணித்தியாலங்கள் நடைபெற்ற ஆட்டத்தின் இறுதியில் - 69 ஆவது நகர்த்தலில்- இலங்கை சம்பியனை சிவோதயன் வெற்றி கொண்டார். இதன்மூலம் யாழ்.சதுரங்க வீரர்களின் திறமையை தேசிய ரீதியில் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட இறுதியாண்டு மாணவன் சிவோதயன் மீண்டும் நிரூபித்துள்ளார். (ஓ)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி நிறுவன ஆசிரியையும், பிரதிக் கல்விப் பணிப்பாளருமாகிய
திருமதி மீரா அருள்நேசன் அவர்களின் அன்புத் தந்தையும்
நிறுவன இயக்குநரும், முன்னாள் வங்கிஉத்தியோகத்தர் - மன்னார்
திரு.அருள்நேசன் அவர்களின் பாசமிகு மாமனாருமாகிய

### தம்பு சிவபாக்கியன்

அவர்களின் மறைவையொட்டி துயர் கடலில் மூழ்கியிருக்கும் அன்னாரின் உறவுகளுக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*198, சென்.பெனடிக்ற் வீதி,*
*அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.*

றேடியன்ற் கல்வி நிறுவன
ஆசிரியர்கள், மாணவர்கள்.

(13450)

## கண்ணீர் அஞ்சலி

பிரபல தமிழ் ஆசிரியை மீரா அவர்களின்
அன்புத் தந்தையார்

### தம்பு சிவபாக்கியன்

அவர்கள் இறைபாதம் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இயக்குநர், ஆசிரியர்கள்,
பணியாளர்கள், மாணவர்கள்.
**பொருளியல் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

(13455)



## உபநயன விழா வாழ்த்து

பண்ணாகம் விசவத்தனை முருகன் ஆலய பிரதமகுரு
**சிவஸ்ரீ பாஸ்கர(ரவி)க்குருக்கள் - பத்மஜா** தம்பதிகளின் புத்திரன்

### சிரஞ்சீவி ஜனார்த்தனசர்மா அவர்கள்

19.01.2003 ஞாயிற்றுக்கிழமை பிரம்ம உபதேசம் பெற்றதையொட்டி
பண்ணாகம் கிராம மக்களின்சார்பாக,
சிரஞ்சீவி ஜனார்த்தனசர்மா அவர்கள் பல்கலையும் கற்று
பல்லாண்டு மாமறை ஓதி மாநிலம் போற்ற
விசவத்தனை முருகன் அருளால் வளமெல்லாம் பெற்று
வாழ்க, வாழ்க என வாழ்த்துகின்றோம்.

(13457) - பண்ணாகம் அண்ணாகலை மன்றம்.

## கண்ணீர் அஞ்சலி

வேலணை கிழக்கு 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த
எமது அன்புக்குரியவர்களான
பாலா யோகநாதன், பாலா செல்வம்,
காலஞ்சென்ற பரமநாதன் (அரசன்)
ஆகியோரின் அருமைத் தாயார்
திருமதி

### பாலசிங்கம் குணபூசணம் (ராசம்மா)

அவர்கள் கனடாவில் காலமான செய்திகேட்டு மிகவும் துயரம் அடைகின்றோம். அவரது பிரிவால் துயரில் மூழ்கியிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாருக்குக் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கிறோம். அத்துடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*122/13, ஆனைப்பந்தி,*
*யாழ்ப்பாணம்.*

(13448)

சி.கந்தசாமி

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல: 3345597 இருந்து
3363494 வரை
சீட்டிழுப்பு இல. 1368
திகதி 18.01.2003

### வெற்றி எண்கள்

**13 17 22 30 52**

போனஸ் எண் **06**

### ஜக்பொட் பரிசு

**ரூபா.1,500,000/-** வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 1,500,000/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 100,000/- | 200,000/- |
| 4 | 110 | 10,000/- | 1,100,000/- |
| 3 | 5,764 | 500/- | 2,882,000/- |
| 2 | 94,187 | 20/- | 1,883,740/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 13ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 115,277 | 10/- | 1,152,770/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.7,218,510/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
**ரூபா. 2,392,000/-**

தொடர் இல. 2364243க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2003 ஜனவரி 22ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில்
பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில்
தங்கப்பரிசு வெற்றி பெறும்
5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3347139-2-73
3352155-7-87
3358588-9-83
3348101-3-52
3356530-3-87

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 17 - 08 - 1930



உதிர்வு 21 - 12 - 2002

அமரர்

### வீரகத்திப்பிள்ளை நடராஜா

(ஓய்வுபெற்ற கணக்காளர்)

21.12.2002 அன்று அமரத்துவம் எய்திய **வீரகத்திப்பிள்ளை நடராஜா** அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (20.01.2003) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு குரும்பைகட்டி ஞானவைரவர் ஆலய முன்றிலில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் கலந்துகொண்டு, அதனைத் தொடர்ந்து அவரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன விருந்துபசாரத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*குரும்பைகட்டி,*
*புலோலி தெற்கு, புலோலி.*

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(13454)

## மரண அறிவித்தல்

### திருமதி குலசேகரம் நாகம்மா *(கொடிகாமம்)*

கொடிகாமம் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குலசேகரம் நாகம்மா 19.01.2003 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*கண்டி வீதி,*
*கொடிகாமம்.*

(13455)

தகவல்:
த.இராமநாதன்
*பயனியர் மில்.*

# சமாதான முயற்சிகள் குறித்த பிரசார வேலைகள் மந்தகதியில்!

**2001 மே மாதத்திலிருந்து இரு மாதங்களுக்கு ஒருமுறை சமாதான முயற்சிகள் குறித்து தேசிய அளவில் கருத்துக் கணிப்பு மேற்கொள்ளப்பட்டுவருகிறது. கடந்த நவம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பை அடிப்படையாகக் கொண்டு பிரபல ஊடகவியலாளரான சுனந்த தேசப்பிரியவால் எழுதப்பட்டு 'ஞாயிறு லங்காதீப' இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

**2001** ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து ஒவ்வொரு இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை சமாதானத்தில் நம்பிக்கை தொடர்பான கருத்துக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டுவருகிறது. கடந்த நவம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பீட்டு அறிக்கை தற்போது வெளிவந்துள்ளது. 20 ஆண்டுகளாக இடம்பெற்ற யுத்தத்திற்கு சமாதானத் தீர்வினை எதிர்பார்ப்பவர்களும், பல்வேறு மட்டங்களில் தற்போதைய சமாதான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பை வழங்குவோரும் கவனம் செலுத்த வேண்டிய பல்வேறு கணிப்புக்கள் இந்த அறிக்கையில் அடங்கியுள்ளன.

சமாதானம் என்பது எதைக் குறிக்கிறது என்ற வினாவுக்கு 2001 மே மாதத்தில் 63 சதவீதமானோர் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதே எனப் பதிலளித்திருந்தனர். சமாதானம் என்பது யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதே என்ற கருத்தை 10 சதவீதமான முஸ்லிம் மக்களும், மலைநாட்டுத் தமிழ் மக்களுமே ஏற்றுள்ளனர். இந்த மக்கள் இனங்களுக்கிடையே நல்லுறவு பேணப்படுவதே சமாதானம் எனத் தெரிவித்துள்ளனர். இனங்களுக்கிடையே நல்லுறவு பேணப்படாததால் ஏற்பட்ட பாதிப்பின் வெளிப்பாடே இந்த மக்கள் இக்கருத்தைத் தெரிவிப்பதற்கான காரணமாகும்.

எனவேதான், வெறுமனே யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதால் சமாதானம் ஏற்பட்டுவிடாது என இம்மக்கள் கருதுகிறார்கள் போலும். சமாதானம் என்பது இனங்களுக்கிடையே நல்லுறவைப் பேணுவதாகும் என்ற கருத்தை குறைந்த சிங்கள மக்களே ஆதரிக்கிறார்கள். இந்தக் கருத்தை ஆதரிக்கும் சிங்கள மக்கள் 44 சதவீதத்தினராகும். இனங்களுக்கிடையே நல்லுறவு அவசியமற்றது என்றோ அல்லது இனங்களுக்கிடையே நல்லுறவை உருவாக்க முடியாது என்றோ பெரும்பான்மைச் சிங்களவர்கள் சிந்திக்கிறார்களா? என்ற வினா சற்றுச் சிந்திக்க வைக்கிறது.

சமாதானத்தை உருவாக்குவதற்காகவே யுத்தம் என்ற கருத்துக்கு இந்நாட்டு மக்களிடையே ஆதரவு மிகவும் குன்றிவிட்டது. இந்தக் கருத்தை ஆதரிப்போர் தேசிய அளவில் 3.5 சதவீதத்தினர் மாத்திரமே ஆகும். 2001 மே மாதத்தில் இந்தக் கருத்தை 21.5 சதவீதமானோர் ஆதரித்தனர்.

யுத்தம் என்பது உயிர்ப்பலியையும் அழிவையும் தந்து மக்களிடையே ஒற்றுமையை அழிப்பதாகும் என்ற கருத்தை 83 சதவீதமானோர் ஆதரிக்கின்றனர். இது முன்னைய கணிப்பீட்டைவிட சதவீதம் அதிகரித்துள்ளது.

அதேபோலவே யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து சமாதானத்தை உருவாக்குவதற்கான மார்க்கம் பேச்சுக்களை மேற்கொள்வதே என்பதை ஏற்போரின் சதவீதம் தொடர்ந்து அதிகரித்தவண்ணமே உள்ளது. 2001 மே மாதத்தில் இக்கருத்தை 59.1 சதவீதத்தினர் ஆதரித்தனர். ஆனால், தற்போது இக்கருத்தை 83.7 சதவீதத்தினர் ஆதரிக்கின்றனர். யுத்தத்தின் மூலமே தீர்வுகாணப்படவேண்டும் என்பதில் நம்பிக்கை கொண்ட சிங்களவர்கள் மத்தியில் கூட அந்தக் கருத்தை ஆதரிப்போர் 6.5 சதவீதமாகக் குறைந்துள்ளனர்.

மறுபுறத்தில் அரசு பேச்சுக்கள் மூலமாக சமாதானத்தை உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் ஈடுபடுகிறது என்ற கருத்தை 56.3 சதவீத சிங்கள மக்களே கொண்டுள்ளனர். தமிழ்மக்களில் 69.9 சதவீதத்தினரும் முஸ்லிம் மக்களில் 82.7 சதவீதத்தினரும் மலையக தமிழ் மக்களில் 73.2 சதவீதத்தினரும் இக்கருத்தை ஆதரிக்கின்றனர்.

தேசிய அளவில் இது 59.4 சதவீதமாகும். 2001 மே மாதத்தில் இந்தக் கருத்தைத் தேசிய அளவில் 50.2 சதவீதத்தினர் கொண்டிருந்தனர். இந்த அதிகரிப்பு போதுமானதல்ல. சிங்கள மக்களிடையே இது தொடர்பாக மேலும் நம்பிக்கையை



வளர்ப்பது சமாதானப் பேச்சுக்கள் வெற்றிபெற இன்றியமையாத தேவையாகும்.

அதேபோல, சமாதான பேச்சுக்கள்மூலம் சமாதானத்தை உருவாக்குவதற்கு விடுதலைப் புலிகள் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார்கள் என்ற கருத்தைக் குறைந்த அளவில் ஏற்றுக்கொள்பவர்களும் சிங்கள மக்களே ஆவர். 20.1 சதவீதத்தினரான சிங்கள மக்களே இந்தக் கருத்தில் நம்பிக்கை கொண்டுள்ளனர். சிங்கள மக்களில் 47.3 சதவீதத்தினர் இந்தக் கருத்தில் நம்பிக்கை கொள்ளவில்லை. தமிழ் மக்களில் ஒரு சதவீதமானோரே இந்தக் கருத்தை ஏற்கவில்லை. தமிழ் மக்களில் 83 சதவீதமானோரும் முஸ்லிம் மக்களில் 73.9 சதவீதமானோரும் மலையகத் தமிழ் மக்களில் 67.7 சதவீதமானோரும் இக்கருத்தை ஏற்கின்றனர்.

கடந்த காலங்களில் சமாதானம் தொடர்பான பேச்சுக்களில் நோர்வே நாட்டின் பங்களிப்புப் பற்றியே அதிகமாகப் பேசப்பட்டு வந்தது. 2002 ஜனவரி மாதத்தில் சமாதானப் பேச்சுக்கள் விடயத்தில் நோர்வே நாட்டின் பங்களிப்பை தேசிய அளவில் 53.8 சதவீதத்தினர் ஏற்றுக்கொண்டனர். ஆனால், 2002 நவம்பர் மாதத்தில் இது 46.3 சதவீதமாகக் குறைந்துள்ளது. ஸ்ரீலங்காவில் சமாதான முயற்சிகளில் நோர்வே நாட்டின் பங்களிப்பை 40.1 சதவீத சிங்கள மக்கள் மட்டுமே ஏற்றுக்கொண்டுள்ளனர். 27 சதவீதமான சிங்கள மக்கள் நோர்வே நாட்டின் பங்களிப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனைய இனங்களுக்கிடையே நோர்வே நாட்டின் பங்களிப்பிற்கு 60 சதவீதம்முதல் 90.4 சதவீதம்வரை ஆதரவு அதிகரித்துள்ளது.

நோர்வே நாடு மூன்றாம் தரப்பாகச் செயற்படாவிடின் சமாதான முயற்சிகள் இவ்வளவு தூரத்திற்கு வெற்றிநடைபோட்டிருக்காது என்பது உண்மையே. அவ்வாறு இருப்பினும், யுத்தத்தின்மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்ற கருத்தை ஏற்காத பெரும்பான்மைச் சிங்கள மக்களிடையே இந்த நம்பிக்கை போதிய அளவிற்கு உருவாகாமல் இருப்பது கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயமாகும்.

அதேபோலவே இந்த அவநம்பிக்கை சிங்கள மக்கள் மத்தியிலேயே அதிக அளவில் நிலவுகிறது. சிங்களவர்களின் 25.4 சதவீதத்தினர் நோர்வே நாட்டின் பங்களிப்பை நிராகரித்துள்ளனர். ஏனைய இனங்கள் மூன்றுக்கிடையே இந்தக் கருத்தை 4 சதவீதத்தினருக்கும் குறைவானோரே கொண்டுள்ளனர். நோர்வே அரசின் பங்களிப்பில் நம்பிக்கை கொண்டுள்ளோரின் சதவீதம் குறைவது சமாதான முயற்சிகள் மீது கொண்டுள்ள நம்பிக்கை குறைவடைவதற்கு வழிவகுக்கக்கூடும்.

அந்நியரின் ஆட்சிக் காலத்தில் இருந்த கசப்பான ஞாபகங்கள் இந்த வெறுப்புக்கு ஒரு காரணமாக அமைய வாய்ப்புக்கள் உள்ளன. சிங்களச் செய்தி ஏடுகள் நோர்வே நாட்டின் பங்களிப்புக் குறித்து அதிருப்தி தெரிவித்ததும் இதற்குக் காரணமாக அமையலாம். தாங்கள் அரசின் கைக்கூலிகள் அல்ல என்பதை உறுதிப்படுத்துவதற்கு பத்திரிகைகள் பயன்படுத்தும் ஒரு துரும்பு நோர்வே நாடு மூன்றாம் தரப்பாக செயற்பட முன்வரும் வேளைகளில் அந்நாட்டை எதிர்ப்பதாகும்.

இருப்பினும் மறுபுறத்தில் ஸ்ரீலங்காவின் சமாதான முயற்சிகளுக்கு இந்திய அரசின் ஒத்துழைப்பு அவசியம் என்ற கருத்தை மிகக் குறைந்த அளவில் ஏற்றுக்கொள்பவர்களும் சிங்கள மக்களே ஆவர். 13.7 சதவீதமான சிங்கள மக்களே இந்தக் கருத்தை ஆதரிக்கின்றனர். இக்கருத்தை, 50.7 சதவீத முஸ்லிம் மக்கள் ஆதரிக்கின்றனர். இந்தியாவின் பங்களிப்பு அத்தியாவசியமானது எனச் சிந்திக்காவிடினும் பொதுவாக இந்நாட்டுமக்கள் இந்தியா இந்நாட்டின் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதை விரும்புகிறார்கள். ஆனால், இந்தியாவின் ஒத்துழைப்பு இந்நாட்டின் தேசிய அரசியலில் பெரிதாக எடுபடவில்லை என்பது கணிப்பீடுகளிலிருந்து தெரியவருகிறது.

சமாதான நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கு வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் தேவை என்ற கருத்தை 29.7 சதவீதமானோர் ஆதரிக்கின்றனர். அதன்மூலம் நல்ல பிரதிபலன் கிடைக்கும் என 41.5 சதவீதத்தினர் விரும்புகின்றனர். வெளிநாட்டு கண்காணிப்பாளர்களால் நாட்டின் இறைமை பாதிக்கப்படும் என்ற கருத்தை மிகச் சொற்பமானவர்களே அதாவது 0.6 சதவீதத்தினரே கொண்டுள்ளனர். சமாதான நடவடிக்கைகள் காரணமாக நாட்டின் இறைமைக்குப் பாதிப்பு ஏற்படும் என்ற கருத்தை நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

இருப்பினும் இந்த வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் பக்கச்சார்பின்றிச் செயற்படுகிறார்கள் என்பதை 27.5சதவீதமான சிங்கள மக்கள் மட்டுமே ஏற்றுக்கொண்டுள்ளனர். சிங்கள மக்களில் 30.1சதவீதமானோர் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் பக்கச் சார்பின்றிச் செயற்படுகின்றனர் என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனைய இனங்களைப் பொறுத்தவரையில் 60இல் இருந்து 81சதவீதமானோர் அவர்கள் பக்கச் சார்பின்றிச் செயற்படுவதாக நினைக்கிறார்கள்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் யுத்தநிறுத்த உடன்பாட்டைக் கண்காணிப்பதில் வெற்றிகரமாகச் செயற்படுகிறார்கள் எனச் சிங்களவர்களில் 26.3 சதவீதமானோர் கருதவில்லை. அதேநேரம் கண்காணிப்புக் குழுவினர் சிறப்பாகச் செயற்படுவதாக 25.1சதவீதமானோர் கருதுகின்றனர். இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்க விரும்பாதோர் 22.5 சதவீதத்தினராவர். நோர்வே நாட்டின் மூன்றாம் தரப்பினராக தமது கடமைகளை அரசினதும் விடுதலைப் புலிகளினதும் உடன்பாட்டுடனேயே மேற்கொள்கின்றனர். ஆனால், மக்களிடையே இது குறித்து தெளிவான விளக்கமில்லை என்பதை கருத்துக் கணிப்பு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

27.11.2002 தினத்தன்று விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் சமாதானம் தொடர்பாக வெளியிட்ட கருத்துக்களை இந்நாட்டு மக்களில் 39.3 சதவீதத்தினர் மட்டுமே அறிந்துள்ளனர். சிங்களவர்களில் 63.8 சதவீதத்தினரும் முஸ்லிம்களில் 58.8 சதவீதத்தினரும் மலைநாட்டுத் தமிழர்களில் 61.7 சதவீதத்தினரும் பிரபாகரனின் உரை குறித்து அறிந்திருக்கவில்லை. அதேநேரம் 88.2 சதவீத தமிழ்மக்கள் அந்த உரை குறித்து அறிந்துள்ளனர்.

தாய்லாந்தில் நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் பேச்சுக் குறித்து மிகக் குறைந்த சதவீதத்திலான முஸ்லிம் மக்களே அறிந்துள்ளனர். அவர்களில் 31 சதவீதமானோர் பேச்சுக்கள் குறித்து எதுவும் அறிந்திருக்கவில்லை. அந்தப் பேச்சுக்களின்போது 3 உபகுழுக்கள் நியமிக்கப்பட்டன.

இவ்வாறு 3 உபகுழுக்கள் நியமிக்கப்பட்டது பற்றி 24.7 சதவீதத்தினரே அறிந்துள்ளனர். இது குறித்து அதிக அளவில் அதாவது 45.5 சதவீதமான தமிழ்மக்கள் அறிந்துள்ளனர். சிங்கள மக்களில் 22.7 சதவீதத்தினரே இது குறித்து அறிந்துள்ளனர்.

சமாதானப் பேச்சுக்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் விதத்தில் 25.11.2002 திகதி நோர்வே நாட்டின் தலைநகரான ஒஸ்லோ நகரில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் பங்குபற்றியது குறித்து 49.8 சதவீதமான சிங்கள மக்கள் அறிந்திருக்கவில்லை.

சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக நாட்டு மக்கள் போதியளவிற்கு அறிந்திருக்கவில்லை என்பதை இந்தக் கருத்துக் கணிப்புக்கள் உணர்த்துகின்றன. பொ.ஐ.முன்னணி அரசு தான் மேற்கொண்ட சமாதான முயற்சிகளின் போது நாட்டு மக்களுக்கு அது பற்றிய விளக்கம் அளிக்கும் முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால், ஐ.தே.முன்னணி அரசுக்கு ஒன்றில் அந்த ஆற்றல் இல்லை. இல்லையேல் அது குறித்து அவர்கள் அக்கறை எடுக்கவில்லை. அல்லது இரண்டுமே இல்லை. அரசாங்கம் மாத்திரமன்றி இந்நாட்டுச் செய்தி ஏடுகள் அவற்றைவிட இலத்திரனியல் ஊடகங்கள் சமாதான முயற்சிகள் குறித்து ஆழமாகவோ அல்லது இலகுவாகவோ எடுத்தியம்புவதில் வெற்றி பெறவில்லை என்பதை மிக மனவருத்தத்துடன் தெரிவிக்கவேண்டியுள்ளது.

அதேபோல இந்நாட்டு சிவில் சமூகத்தினரும் இவ்விடயத்தில் ஆழமான சிந்தனையைச் செலுத்தவில்லை. நாட்டில் ஜனநாயகத்தைப் போலவே தற்போதைய சமாதான முயற்சிகளும் நாட்டு மக்கள் தெரிந்து கொள்வதிலும் செயற்படுவதிலுமே தங்கியுள்ளன. சமாதானமும் ஜனநாயகமும் தேவை எனில் சமூகங்களும் தங்கள் கடமைகளை நிறைவேற்றவேண்டும்.

எவ்வாறாயினும் இந்த மக்கள் கருத்துக் கணிப்பீட்டின்மூலம் இந்நாட்டு மக்கள் பேச்சுக்களின் மூலம் சமாதானம் உருவாக்கப்படுவது தொடர்பாகக் கொண்டுள்ள ஆர்வம் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரை நடைபெற்ற (நவம்பர் 25ஆம் திகதிவரை) சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக 23 சதவீதத்தினர் மிகுந்த திருப்தி தெரிவித்துள்ளனர். 38.8 சதவீதமோனோர் ஓரளவு திருப்தி தெரிவித்துள்ளனர். எதுவும் தெரிவிக்காதோர் 13.8 சதவீதத்தினராவா. சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக முற்றுமுழுதான அதிருப்தி கொண்டோர் 12.1 சதவீதமானோர் ஆகும். சுமார் 7 சதவீதமானோர் ஓரளவிற்கு அதிருப்தி கொண்டுள்ளனர்.

சமாதான முயற்சிகளுக்கு சிங்கள மக்களிடையே மாத்திரமன்றி ஏனைய இனங்களுக்குமிடையில் ஆதரவைப் பெருக்குவது அரசு எதிர்நோக்கும் முக்கிய சவாலாகும். காரணம் எதிர்காலத்தில் எதிர்நோக்கவுள்ள தடைகள் பலமிக்கனவாகும். எதிர்நோக்கும் சவால்களின் பின்னணியிலேயே உயர்பாதுகாப்பு வலயங்கள் குறித்த பிரச்சினையைக் கவனத்தில் கொள்ளவேண்டும். ✪

**தமிழில்: கஜனி**


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
### அந்தியேட்டி அழைப்பும்
### நன்றி நவிலலும்

தோற்றம் 15 - 06 - 1929



மறைவு 23 - 12 - 2002

**திருமதி கணபதிப்பிள்ளை இராசம்மா** *(வேலணை)*

பண்பின் உறைவிடமான எங்கள் அன்புத் தெய்வமே!
கண்முன் உங்கள் உருவம் அழகாய்த் தெரியுதம்மா!
*உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.*

இன்று (20.01.2003) திங்கட்கிழமை காலை 8மணிக்கு வில்லூன்றித் தீர்த்தக் கரையில் நடைபெறும் அவரது அந்தியேட்டிக்கிரியைகளிலும் 22.01.2003 புதன் கிழமையன்று எமது வேலணை இல்லத்தில் 11.00மணிக்கு நிகழும் சபிண்டீகரணம் மற்றும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னார் சிவப்பேறெய்திய வேளையில் உடனிருந்து, ஆறுதலும் தேறுதலும் அளித்த உறவினர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் பல விதத்திலும் உதவிகள் செய்து எமது துயரத்தில் பங்குகொண்டோருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*4ஆம் வட்டாரம், வேலணை.* (13460)

பிரிவால் துயருறும்: **பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## பயிற்றப்பட்ட தாதியர்களும் பயிலுநர்களும் தேவை

எமது நிறுவனத்துக்கு பயிற்றப்பட்ட தாதியர்களும், பயில விரும்பும் பயிலுநர்களும் தேவை. தகுதியுடையோர் உடனே நேரில் வரவும். பயிலுநர் தாதிகளுக்கு பயிற்சிக் காலத்தின் போது ஊக்குவிப்புப் பணக் கொடுப்பனவும் தரமான சான்றிதழும் வழங்கப்படும்.

**யாழ்.வைத்தியசாலை**
2?, பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
TP: 222-3533 (13462)






தமிழ் தொலைக்காட்சி இணையம் (ரி.ரி.என்.) சுவிஸ் சிகரம் நிறுவனத்துடனும், டி.எம்.என், 'உதயன்' பத்திரிகை ஆகிய நிறுவனங்களுடனும் இணைந்து நடத்திய பொங்கல் விழாவில் எடுக்கப்பட்ட படங்கள்.

அங்கு இடம்பெற்ற மங்கல விளக்கேற்றல், மாவீரர் தின கவிதைப்போட்டி பரிசளிப்பு, நாதஸ்வரக் கச்சேரி, வீரதீர செயல்கள் ஆகிய நிகழ்ச்சிகளின் படத்தொகுப்பு இது.

# அம்பாறை மாவட்ட வெள்ள அகதிகளுக்கு இன்றுமுதல் மூன்று நாள்களுக்கு உலருணவு

## திருக்கோவில் பிரதேசத்தில் பெரும் பாதிப்புக்கள்

காரைதீவு,ஜன.20

அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் 69ஆயிரம் குடும்பங்களுக்கு இன்றுமுதல் 3நாள்களுக்கு உலர் உணவு வழங்கப்படவிருக்கின்றது. பல நோக்கு கூட்டுறவுச்சங்கங்கள்மூலம் இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. மாவட்டச்செயலாளர் எஸ்.எஸ். ஜீ.புரீவர்த்தனா இதற்கான பணிப் புரையைவிடுத்திருக்கிறார்.

வெள்ளத்தால் வீடு வாசல்களை இழந்த 5,363 குடும்பங்களுக்கு கடந்த சனிக்கிழமை முதல் மூன்று நாள்களுக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டு வருகிறது.

மாவட்டத்தின் மிக மோசமாக பாதிக்கப்பட்ட திருக்கோயில் பிரதேசத்தில் 5,573 குடும்பங்கள் நிர்க்கதியான நிலையில் இருப்பதாக பிரதேச செயலாளர் ஏ.கே.தவராஜா கூறினார். இதுவரை அங்கு 138 வீடுகள் இடிந்து வீழ்ந்துள்ளன. மேலும் 48 வீடுகள் இடிந்து விழும் நிலையில் உள்ளன எனவும் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேரு, பிரதேச செயலாளர் ஏ.கே.தவராஜாவுடன் சென்று வெள்ளநிலைமைகளை நேரில பார்வையிட்டார்.இடுப்பளவு வெள்ளத்திலும் இவர்கள் பாதிக்கப்பட்ட வீடுகளை பார்வையிட்டனர். (ஜ)

# நுண்கலை துறையினருக்கு

யாழ்ப்பாணம்,ஜன.20

நாட்டியப் பேரறிஞர் அடையாறு கே.லக்ஷ்மணன் இன்று காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நுண கலைத்துறை மாணவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

யாழ் பல்கலைக்கழக நுண்கலைத் துறை மாணவர்கள் அனைவரையும் இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா கேட்டுள்ளார். (ஜ-12)

# மரண அறிவித்தல்

## தம்பு சிவபாக்கியன்

அல்வாய்மேற்கைப் பிறப்பிடமாகவும், 198, சென்பெனடிக்ற் றோட் (ஆசீர்வாதப்பர்) அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு சிவபாக்கியன் நேற்றுமுன்தினம் (18.01.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் நஸ்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ராணி ஜெகசோதி (முன்னாள் ஆசிரியை, திருமலை புனித சூசையப்பர் கல்லூரி) மற்றும் சிவநாதன் (யாழ். மாநகரசபை சுகாதார பரிசோதகர்), மீரா அருள்நேசன் (பிரதிக்கல்விப் பணிப்பாளர், யாழ். வலயம்), சிவமோகன் (கிராமசேவை உத்தியோகத்தர், நல்லூர்), சியாமாஜஸ்ரஸ் (ஆசிரியர், ஸ்ரான்லிக் கல்லூரி), சிவயோகன் (தாதி உத்தியோகத்தர் & நாற்சதுர சுவிஷேச சபை போதகர்), சிவரூபன் (பொறியியலாளர், லண்டன்), சிவவாசன் (பிரான்ஸ்), சிவகாந்தன் (பொறியியல் மாணவன், லண்டன்), ரஜனி மோகனகுமார் (யாழ். செயலகம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஜெகசோதி (பிரபல சட்டத்தரணி, திருமலை), அன்ரனிறோஸ், அருள்நேசன (முன்னாள் மக்கள் வங்கி உத்தியோகத்தர், மன்னார் & ரேடியன் கல்வி நிறுவன நிர்வாகி அரியாலை), ஜஸ்ரஸ் சன்னியாகோ (சுகாதார பொறியியல் பிரிவு, யாழ். மாநகரசபை), ஆன்யூலிட், சசிகலா (லண்டன்), திருவளர் செல்வி (பிரான்ஸ்), ஜன்சிராணி (லண்டன்), மோகனகுமார் (கட்டடமேற்பார்வையாளர், லிப்கோ கல்வி நிறுவனம் உடுப்பிட்டி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சி.திரவியம் (பிரபல முன்னாள் அதிபர், அகிலஇலங்கை சமாதான நீதிவான்), சி.திருநாவுக்கரசு (இளைப்பாறிய மருந்தாளர்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மதன் (வைத்திய கலாநிதி, கொழும்பு களுபோவில வைத்தியசாலை), பிரதீஸ் (3 ஆம் வருடமருத்துவ மாணவன், யாழ். வளாகம்), அமிர்தாப் (A/L ஸ்ரான்லிக் கல்லூரி), சிந்தனா (திருமலை கன்னியர்மட மாணவி), டெஸ்மன் ரஜீவன் (O/L ஸ்ரான்லிக் கல்லூரி), ஆருணியா (சென்ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்), நந்திகா, நிருத்திகா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவிகள்), நிதுசன் (சென்ஜோன்ஸ் கல்லூரி), ஜெகுடிலக்ஸன், பிஸ்ஷான், தாருண்யா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2003) திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*198, சென்பெனடிக்ற் வீதி, (ஆசீர்வாதப்பர் வீதி) அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.* (13472)

தகவல்: R.அருள்நேசன் (மருமகன்) (நிர்வாகி, ரேடியன்ற் கல்வி நிறுவனம் அரியாலை.)


விசேட புலமைப் பரிசில் பயிற்சி வகுப்புக்கள்
ஆசிரியர்: S.பிரபா
ஆரம்பம்: 24.01.2003 5.00p.m.
N.E.I நல்லூர். (C/26152)


ஒகன் வகுப்பு
ஆசிரியர்: திரு. ஸ்ரீதுகன்
திங்கள், வெள்ளி மாலை 5மணி
N.E.I நல்லூர்.
(சட்டநாதர் கோவில் முன்புறம்) (C/26153)

லஷ்மி இணுவில்

(ரீலஸ்)
காட்சிகள்: 11.00, 3.00, 7.00, (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.
விஜய், ஸ்நேகா,

காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30
ரிக்கற்றுக்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நாகம்ஸ் சுன்னாகம்.
பிரசாந், ஸ்நேகா, நாசர் நடித்த

விரும்புகிறேன் (ரீலஸ்)
(புதிய வெளியீடு)
காட்சிகள்: 11.00, 3.00, 6.30 (பு.நேரம்).

நிரஞ்சனாஸ் சங்கானை
அஜித், விக்ரம், மகேஸ்வரி நடித்த

உல்லாசம்
கா.நே. - 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
TOMB RAIDER (C/26093)


# வி. பி. கிண்ண கிரிக்கெட் ஆஸ்திரேலியா வெற்றி!

சிட்னி,ஜன.20

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் வி.பி. கிண்ணத்துக்கான ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று இடம்பெற்ற இங்கிலாந்து அணியுடனான ஆட்டத்தில் ஆஸ்திரேலியா அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது.

அடிலெய்ட் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி, முதலில் துடுப்பெடுத்தாடியது.

அந்த அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் அனைவரும் ஆஸ்திரேலிய வீரர்களின் பந்து வீச்சுக்கு முகம்கொடுக்க முடியாமல் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். இதனால், இவ்வணி 48.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 152 ஓட்டங்களை மட்டும் பெற்றது. கொலிங்வூட் 63 ஓட்டங்களையும், மைக்கல் வோகன் 21 ஓட்டங்களையும் இராணி 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஆஸ்திரேலிய அணியின் சார்பில பிரகென் 3 விக்கெட்டுக்களையும் வற்சன், பிரட்ஹொக் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

அதனைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி பலத்த போராட்டத்தின் மத்தியில் 47.3 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் மார்டின் கே. கிளார்க்கே மற்றும் மைக்கல் பெவன் ஆகியோர் முறையே 59,39 மற்றும் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

இங்கிலாந்து அணி சார்பாக டி. பிளக்வெல் 3 விக்கெட்டுக்களையும் அன்ரூ ஹடிக், அண்டர்சன், மைக்கல வோகன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (5)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கணபதிப்பிள்ளை பார்வதிப்பிள்ளை

*(துன்னாலை)*

துன்னாலையைப் பிறப்பிடமாகவும் வாசிகசாலை வீதி, கூமாங்குளம், வவுனியாவைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை - பார்வதிப்பிள்ளை அவர்கள் நேற்று (19.01.2003) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர் க.கணபதிப்பிள்ளை (ஓய்வு பெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் Dr. தணிகாசலம் (ஆஸ்திரேலியா), குணமணி (வவுனியா), சின்னையா (சிமெந்துக் கூட்டுத்தாபனம்), Dr. இரத்தினகோபால் (ஆஸ்திரேலியா), சுந்தரலிங்கம், கணேசலிங்கம் (ஜேர்மனி), சறோஜினி (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஈஸ்வரி (ஆஸ்திரேலியா), அருள்நாயகம் (சட்டத்தரணி, கிளிநொச்சி), ஜெயராணி, Dr. சுபாசினி (ஆஸ்திரேலியா), செல்வராணி (ஜேர்மனி), கனகலிங்கம் (பொறியியலாளர், சவூதி) ஆகியோரின் அன்பு மாமியாரும் செல்வினி, செந்தூரன், மயூரன், கார்த்திக், அருள்மணி, நிலானி, நிஷாந்தன், நிஷாந்தினி, உமேஷ், றேகா, ஷோபா, கேதாரகௌரி ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் புதன்கிழமை (22.01.2003) அன்று கூமாங்குளம், வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் இடம் பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வாசிகசாலை வீதி, கூமாங்குளம், வவுனியா.* (13468)

தகவல்: க.சின்னையா (மகன்), 25, புதுவீதி கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

## நல்லதம்பி நடராசா

*(இளைப்பாறிய ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி)*

அளவெட்டி கும்பிளாவளை மேற்கைச் சேர்ந்த நல்லதம்பி நடராசா நேற்று (19.01.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பராதேவியின் அன்புக் கணவரும், கிருபாகரன் (பொறியியலாளர், அமெரிக்கா), Dr.பகீரதன் (கொழும்பு), யோகராசா (பொறியியலாளர், திருகோணமலை) ஆகியோரின் தகப்பனாரும், நிலாவின் பேரனும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - தெய்வானைப்பிள்ளையின் மகனும், கொக்குவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை - இரத்தினத்தின் மருமகனும் காலஞ்சென்ற வல்லிபுரம் (ஆசிரியர்) மற்றும் தங்கம்மா (அளவெட்டி), காலஞ்சென்ற செல்லம்மா (மலேசியா) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.01.2003) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக குடும்ப மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

*கும்பிளாவளைமேற்கு, அளவெட்டி.* (13471)

தகவல்: - மனைவி, பிள்ளைகள்.

# பிரதேசம் வளர்ச்சி அடைய கிராம அபிவிருத்தி அவசியம்

## முன்னாள் கல்லூரி அதிபர் வலியுறுத்து

கொடிகாமம்.ஜன.20

பிரதேச வளர்ச்சிக்கு கிராமப் பகுதிகளையும் அபிவிருத்தி செய்வது அவசியமாகும். அண்மையில் அல்லாரை கிராமத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ரவிராஜ் பங்கேற்ற நிகழ்வில் உரையாற்றிய சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபரும் அல்லாரை அறுகம்புலம் விநாயகர் ஆலய பரிபாலன சபைத் தலைவருமான கே.சந்திரசேகரா தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதேசங்களின் வளர்ச்சிக்கு கிராமங்களின் பங்களிப்பு மிக முக்கியமானது. அந்த வகையில் எமது அல்லாரைக் கிராமம் இரண்டு தசாப்தங்களாக எவ்வித புனரமைப்புகளும் செய்யப்படாது மிகவும் மோசமான நிலைமையில் உள்ளது. இங்குள்ள பிரதான வீதிகள், குறுக்கு வீதிகள என்பன பாரிய குன்றும் குழியுமாகவும் மணல் நிறைந்த வீதிகளுமாகவே காணப்படுகின்றன.

இங்கு விவசாயிகளே அதிகம் உள்ளனர். அவர்கள் தமது விவசாய உற்பத்திப்பொருள்களை சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் சந்தைகளுக்கே கொண்டு செல்லவேண்டும்.

இந்நிலையில் மோசமான வீதிகளால் பெரும் சிரமங்களை மக்கள் எதிர்நோக்குகின்றனர்.

அது மட்டுமன்றி இராணுவம் நிலைகொண்டுள்ள பல வீடுகள் மீளக்குடியமர அனுமதிக்கப்படாமலும் இராணுவத்தினரால் கைவிடப்பட்ட பகுதிகளில் மிதிவெடிகள் அகற்றப்படாமலும் உள்ளன. இதனால், மக்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர் என்றார் அவர்.

(ஒ-74)

# பதினெட்டு மாவட்டங்களில் ஜே.வி.பி. இன்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஜன.20

விலைவாசி உயர்வினைக் கண்டித்தும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் ஜே.வி.பி. இன்று திங்கட்கிழமை 18 மாவட்டங்களில் ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளது.

கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, தங்காலை, பதுளை, மொனராகலை, இரத்தினபுரி, கேகாலை, கண்டி, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் மாலை 4 மணிக்கு இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெறும்.

நுவரெலியாவில் காலை 10 மணிக்கும், அநுராதபுரத்தில் முற்பகல் 11 மணிக்கும் கந்தளாய், அம்பாறை ஆகிய மாவட்டங்களில் காலை 10 மணிக்கும் ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது. குருநாகல், சிலாபம், கதுருவெல ஆகிய இடங்களில் மாலை 4 மணிக்கு ஆர்ப்பாட்டம் இடம்பெறும்.

(ஐ)

## அறநெறி பாடசாலை

யாழ்ப்பாணம்,ஜன.20

வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி கோயிலில் (பன்றிக்கோட்டு பிள்ளையார் கோயில்) நேற்று அறநெறிப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இப்பகுதியைச் சேர்ந்த தரம் 2 முதல் 11 வரையான மாணவர்கள் இந்த வகுப்பில் சேர்ந்துகொள்ளலாம் என்று ஆலய தர்மகர்த்தா சபைச் செயலாளர் அறிவித்திருக்கிறார்.

(ஐ)

## கட்டாக்காலி மாடுகளால் பயிர்அழிவு

தென்மராட்சி,ஜன.20

மீசாலை, வேம்பிராய்ப் பகுதியில் அலையும் கட்டாக்காலி மாடுகளால் இப்பகுதியில் மேற்கொள்ளப்படும் விவசாயப் பயிர்கள் தினமும் அழிக்கப்பட்டு வருவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

மூன்று வருடங்களின் பின்னர் தமது விளை நிலங்களில் பயிர்செய்கையை மேற்கொண்ட விவசாயிகள், கட்டாக்காலி மாடுகளால் தமது பயிர்கள் அழிக்கப்படுவது குறித்து கவலை தெரிவித்தனர்.

(ஐ-117)

## தொலைபேசி இணைப்பு வயர் துண்டிப்பு

நல்லூர்,ஜன.20

கட்டப்பிராய் பகுதியில் உள்ள தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றின் தொலைபேசி இணைப்பு வயர் நேற்று முன்தினம் இரவு அறுக் கப்பட்டிருக்கிறது.

இது குறித்து தொலைத் தொடர்பு நிலைய உரிமையாளர் ரெலிகொம் நிறுவனத்தில் முறையிட்டிருக்கிறார்.

வீதிகளில் இரவில் கோஷ்டியாக நடமாடுவோர் இது போன்ற விஷச் செயல்களில் ஈடுபடுகின்றனர் என்று இப்பகுதி வாசிகள் கூறுகின்றனர்.

(ஐ-ரி)

## உற்சவம்

சண்டிலிப்பாய்,ஜன.20

மாகியப்பிட்டி புனிதசெபஸ்தியார் ஆலய வருடாந்த உற்சவத்தின் இறுதி நாள் திருவிழா இன்று திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

திருப்பலிப் பூசையும்,அதனைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் நடைபெறும்.பூசைகளை மணற்காடு பங்குத்தந்தை அருட்திரு.அன்ரன் ஜோர்ச் நிகழ்த்துவார். (எ-135)

## எதிர்க்கட்சிக்குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷ தலைமையில் யாழ். வரும் குழுவினர் இன்று காலை 10 மணிக்கு ஆனைப்பந்தியில் நிறுவப்பட்டிருக்கும் குருகுலக் கலாசாலையின் திறப்பு விழாவில் கலந்துகொள்வர்.

இன்றைய திறப்பு விழாவை முன்னிட்டு அங்கு நேற்று இரவு முதல் சமயக் கிரியைகள் ஆரம்பமாகின.

(ஐ)

## சு.க. - ஜே.வி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆலோசனைகளை அக்கட்சிக்கு வழங்கியிருக்கின்றனர் எனவும் தெரியவருகிறது.

அச்சட்டத்தரணிகள் வழங்கியிருக்கும் ஆலோசனையின்படி பொ.ஐ. முன்னணியாக தேர்தல் ஆணையாளரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் கட்சிகளில் பெரும்பான்மையானவற்றின் தீர்மானத்தின் பேரில் பொ.ஐ. முன்னணி பொதுச் செயலாளரை மாற்றமுடியும் எனவும் தெரிகிறது.

பொதுச்செயலாளரை அவ்வாறு மாற்றியபின்னர் பொ.ஐ.முன்னணினால் நிர்வகிக்கப்படும் மாகாண சபைகளின் முதலமைச்சர்களை புதிதாக நியமிக்க, புதிய செயலாளருக்கு அதிகாரம் கிட்டும் எனவும் ஆலோசனையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக அறியவருகிறது.

சமசமாஜ, கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகள் சு.க.-ஜே.வி.பி. கூட்டணிக்கு ஏற்கனவே எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றன.

(ஐ)

## பாதுகாப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பிரபாகரன் மட்டுமன்றி விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவ ஆசிரியரும் சமாதானப் பேச்சுக்களின் புலிகள் தரப்புக் குழுவின் தலைவருமான அன்ரன் பாலசிங்கமும் முஸ்லிம் மக்களின் உரிமைகளும் பாதுகாக்கப்படும் என்ற உறுதி காப்பாற்றப்படும் என்று தொடர்ந்து கூறி வருகிறார்.

எனவே, வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் அங்கே திரும்பிச் செல்லலாம் என்று ஹக்கீம் வலியுறுத்தியிருக்கிறார்.

இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் திரும்பிச் செல்வதில் மந்த நிலை காணப்படுகிறது. சுமார் 100 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்தான் இப்போது திரும்பிச் செல்ல விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள்.

இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்வதில் காணப்படும் மந்தநிலையைப் போக்குவதற்குச் செயற்றிட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டும்.

- இதற்கான பொறுப்பு பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் எச்.எஸ்.ஹஸ்புள்ளாவிடம் ஒப்படைக்கப்படுகிறது என்று ஹக்கீம் சொன்னார்.

ஆங்கில வாரப்பத்திரிகை ஒன்றின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே ஹக்கீம் இப்படிக் கூறினார்.

டாக்டர் ஹஸ்புள்ளா; தாய்லாந்தில நடந்த நான்காவது சுற்றுச் சமாதானப் பேச்சுக்கு அமைச்சர் ஹக்கீமுடன் சென்ற புத்திஜீவிகள் ஆலோசனைக்குழுவில் இடம்பெற்றிருந்தார் என்பதும் -

'சிரான்' என்ற உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழுவில் ஓர் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கவையாகும்.(ஐ)

## நல்லூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோட்டார் சைக்கிள் வீதியோரமாக வீசப்பட்டுக் கிடந்தது. செலுத்தி வந்தவர் மினி பஸ்ஸின் கீழ்ப்பகுதிக்குள் சிக்குண்டார் என்றும் -

அப்படியே அவர் வீதியில் நீண்ட தூரம் இழுத்துச் செல்லப்பட்டார் என்றும் கூறப்படுகிறது.

படுகாயங்களுடன் மீட்கப்பட்டு யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட சிறிது நேரத்தில் உயிரிழந்தார்.

இவரது சடலம் மரண விசாரணைக்காக ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டி ருக்கிறது.

இதேவேளை - நேற்று நகரில் ஆனைப்பந்தி பகுதியில் இடம்பெற்ற மற்றொரு விபத்தில் கதிர்காமு தினேஷ் (வயது17) என்பவர் தலையில் படுகாயமடைந்தார்.

இவர் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டைமீறி - வீதியை விட்டு விலகி - சுவருடன் மோதியது என்று கூறப்படுகிறது.

இவர் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.(ஐ-15-9)

## நுணாவிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டுள்ளனர்-என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

யாழ்ப்பாணம், கந்தரோடைப் பகுதியிலுள்ள தமது படைநிலைகளைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளிலும் படையினர் ஈடுபட்டு வருவதாக புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி, மக்களை மீளக் குடியமர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்படும் தற்போதைய நிலையில், படையினர் தமது முகாம்களை பலப்படுத்துவதிலும் புதிய முகாம்களை அமைப்பதிலும் ஈடுபட்டு வருகின்றமை மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.-என்றும் புலிகளின் வானொலி தெரிவித்தது. (ஐ-9)

## புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாத்தியமான திட்டம் ஒன்றை வகுத்துத் தருமாறும் அப்போது லெப்டினன்ட் ஜெனரல் நம்பியாரை அரசு கேட்டுக் கொண்டது எனவும் -

'சண்டே ரைம்ஸ்' வார இதழ் தகவல் வெளியிட்டிருக்கிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரில் லெப்டினன்ட் ஜெனரல் சத்தீஷ் நம்பியார் கடந்த செப்ரெம்பரிலும், டிசெம்பரிலும் கொழும்பு வந்திருந்தார் எனவும் அப்போது இந்த விடயங்கள் பற்றி அரசு அவருடன் கலந்தாலோசனைகளை நடத்தியது என்றும் கூறப்படுகிறது.

உயர்பாதுகாப்பு வலயங்களை இராணுவத்துக்கு பாதகம் ஏற்படாத வகையில் மாற்றி அமைப்பது பற்றிய திட்டம் ஒன்றை வகுப்பதற்காக லெப்டினன்ட் ஜெனரல் நம்பியார், யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகாவுடன் விமானப் படை ஹெலிக்கொப்டர் ஒன்றில் உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களை சுற்றிப் பார்வையிட்டார் என்று 'சண்டே ரைம்ஸ்' தெரிவித்திருக்கிறது. (ஐ)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோணமலை என்பன தற்சமயம் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. அங்கு தங்களின் மறைமுகமான ஆணையதிகாரத்தை புலிகள் கொண்டிருக்கிறார்கள். இது விடயத்தில் நோர்வேயினர், புலிகளோடு சிறிதளவு உடன்பாடு கொண்டுள்ளனர் என்பது எனக்குத் தெளிவாகிறது".

- இவ்வாறு அப்பேட்டியில் டிக்ஸிற் கூறியிருக்கிறார்.

(ஐ)


எமது புதிய வீடியோ CD வெளியீடு
❖ வசீகரா
❖ அன்பே சிவம்
வீடியோ விமல்
யாழ்ப்பாணம். (13469)

எமது புதிய வீடியோ CD வெளியீடு
விஜயின்
❊ வசீகரா
கமல், மாதவனின்
❊ அன்பேசிவம்
I.T.N. பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி. (13470)

A/L 2003 LOGIC
முன்னோடிப் பரீட்சை
* 6 மாதிரிப் பரீட்சைகள் நடத்தப்படும்.
* 25ஆம் திகதி(சனி) பதிவு நடைபெறும்.
* வெளி மாணவர் பரீட்சைக்குத் தோற்றலாம்.
* அனுமதிஅட்டை 5ஆம் திகதி அனுப்பிவைக்கப்படும்.
நிறுவனம் :
மணி கல்வி நிறுவனம் - வேலணை
மதுபாரத் - யாழ்ப்பாணம்.
BRIGHTMAN-யாழ்ப்பாணம்.
By. P .கமல்
தொ.பே: 0777 240640 (13426)

A/L 2004
பௌதிகவியல்
புலங்கள்
ஆரம்பம் : 21.01.2003
செவ்வாய் 4.30 p.m.
ஆசிரியர் : திரு. சிவலிங்கம்
நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில். (13424)

தென்னிந்தியாவில் இருந்து

முதல் முறையாக யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு வருகைதந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்
ராஜகுருசாமி அவர்கள்
★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்கணிதம்
★ பெயர்ராசி ★ திருமணப்பொருத்தம்
இவற்றில் பலவருட அனுபவமும் புகழும் பெற்றவர்.
(13438)
ராஜகுருசாமி
மிலன்ஸ் மல்ரி கொம்பிளக்ஸ்
60/1 (112), TEMPLE ROAD [Near ICRC], JAFFNA.



ஸ்ரீ ராம ஜெயம்
திருமண அழைப்பு
அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் தைத்திங்கள் 6 ஆம் நாள் (20.01.2003) திங்கட்கிழமை மு.ப. 10.15 மணிமுதல் 11.05 மணிவரையுள்ள மீனலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

எமது சிரேஷ்ட புதல்வன்
திருநிறை செல்வன்
சிவநேசன
(பட்டாபி படமாடம்)
அவர்களுக்கும்

எமது சிரேஷ்ட புதல்வி
திருநிறை செல்வி
ஸர்மிளா
அவர்களுக்கு

திருவேங்கடவன் திருவருள் துணைகொண்டு ஸ்ரீ லக்ஷ்மி நாராயணன் கல்யாண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடரும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
தங்கள் நல்வரவை இனிதே நாடும்
திரு. திருமதி தி.தில்லைநாதன், திரு. திருமதி சிவபாலசுப்பிரமணியம் (கோபால்)
சண்முகராசா ஜமுனா,
குடும்பம் (கனடா)
19/10 கலைப்புலவர் வீதி,
யாழ்ப்பாணம்.
கிருஷ்ணசாமி (வவுனியா),
வாமதேவன் (லண்டன்),
மகேஸ்வரன் (லண்டன்),
(இருவீட்டார் அழைப்பு) (13432)



யாழ்ப்பாணம்
வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்
கூறுவிலை கோரல்
01. ஐந்து கலசம்
உயரம் 30 அங்குலம் மெசின் கடச்சல் செம்பு வார்ப்பு.
02. இராஜகோபுரம்
உயரம் 83 அடி பொம்மைகள் 360 வர்ணம் பூசுதல் பஞ்சவர்ணக் கலர் கூலி.
03. ஸ்ரீ ரெங்கநாதன் கோபுரம்
உயரம் 53 அடி பொம்மைகள் 210 வர்ணம் பூசுதல் பஞ்சவர்ணக் கலர் கூலி.
இரண்டிற்கும் தேவைப்படும் பொருள்களைப் பற்றி விவரமாகத்தரவும்.
முடிவு திகதி : 27.01.2003
- கோபுர திருப்பணிச் சபை.
(13439)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.01.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.